விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 01 புதன்கிழமை (13.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# ஐ.நா மனித உரிமை பேரவையில்

# இலங்கை தொடர்பான பிரேரணை!

## பிரித்தானியா தலைமையேற்று கொண்டுவரப்போவதாக உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(லண்டன்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அடுத்த மாதம் இலங்கை தொடர்பான பிரேரணையை கொண்டுவரும் நடவடிக்கைக்குத் தலைமை தாங்கப் போவதாக பிரிட்டன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதரகம் இது குறித்து சிறப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலில் மோட்டார் குண்டு கண்டுபிடிப்பு

(கரணவாய்)

வீட்டு வளவு ஒன்றில் கிடங்கு வெட்டிய போது மோட்டார் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாகர்கோவில் மேற்கு பகுதியில் உள்ள வீட்டு வளவு 24

## சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர்

### தயாசிறிக்கு மாரடைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகரவுக்கு மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 24

## 12 பேர் கொண்ட கும்பலால் வீடு புகுந்து வாள்வெட்டு

### ஒருவர் படுகாயம்; வரணியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வரணியில் வாள்வெட்டு கும்பலின் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வரணி மாசேரியில் நேற்று மாலை 6.00 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது. பன்னிரண்டு பேர் கொண்ட கும்பலொன்று வீடு புகுந்து நடத்திய வாள்வெட்டு தாக்குதலில் தலையில் பலத்த வெட்டுக்காயத்துடன், வைத்திய சாலையில் ஒருவர் அனுமதிக்கப் 23

## வடக்கின் நீர்ப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும்



### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களின் வறுமை நிலைக்கான பிரதான காரணியாக காணப்படும் நீர்ப் பிரச்சினைக்கு துரித தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று நண்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி அலுவல 24

## விசுவமடுவில் வயோதிபர் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு விசுவமடு றெட்பான இளங்கோபுரம் பகுதியில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 24

## இரசாயன தொழிற்சாலை பரந்தனில் அமைக்கப்படும்

### பிரதியமைச்சர் புத்திக பத்திரன



(கிளிநொச்சி)

பரந்தனில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பற்ற வகையிலான இரசாயன தொழிற்துறையொன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் 24

## மோ.சைக்கிளில் வந்தவர்களால் தாலிக்கொடி அறுப்பு

### காக்கைதீவு பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணைப் பின்தொடந்து சென்ற இருவர் குடும்பப் பெண் அணிந்திருந்த தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தலைமறைவாகினர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அராலி வீதி காக்கதீவுப் பகுதியில் நேற்று இரவு நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் முகத்தை 23

## நடுக்கடலில் மயங்கி விழுந்த மீனவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் நடுக் கடலில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெருவை 23

## இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஐ.நா. முழு ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஐ.நா. முழு ஆதரவினை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர





மைப்பு அமைச்சர் தலதா அத்து கோரள குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்துறை பிரதானி மோனா ஏ.ரிஷ்மாவிற்கும் அமைச்சர் தலதா அத்து கோரளவிற்கும் இடை 23

## யாழ் வேம்படி மகளிர் கல்லூரி வீதி பகுதி நேர ஒருவழிப்பாதையாகிறது

### யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி வீதியை காலை வேளையிலும் பாடசாலை நிறைவடையும் நேரத்திலும் ஒருவழிப் பாதையாக நடைமுறைப்படுத்துவதென யாழ் மாநகரசபை தீர்மானித்துள்ளது. இந்த ஒழுங்குமுறை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என 23

## திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்த மகிந்த

(பெங்களூர்)

எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ, ரத சப்தமியை முன்னிட்டு நேற்று அதிகாலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். 24



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-5462)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

3பேர் உள்ள வீட்டில் சமையல் மற்றும் இதர வீட்டுப்பணிகளைத் தங்கியிருந்து செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை
ஊதியம் ரூபா 18.000 இற்கு மேல்
உணவு,தங்குமிடம் இதரவசதிகள் தரப்படும்
வடமராட்சி, நெல்லியடி
**தொடர்பு : 075 065 9212**

# கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜப்பான் அதிகாரிகள் ஆய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகமாலை பகுதியில் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜப்பானிய தூதரக அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த பகுதிக்கு விஜயம் செய்த ஜப்பான் குழுவினர் கண்ணிவெடி அகற்றும் பணிகளை பார்வையிட்டதுடன், அங்குள்ள நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முகமாலை, வேம்பொடுகேணி, கிளாலி ஆகிய பகுதிகளில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-3)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மடத்தடியில் 11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (கிணறு, தென்னை, மலசலகூடம், நீர்த்தாங்கி உண்டு) (7466)
தொடர்புகளுக்கு:
**077 407 2058, 077 035 7307**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் உணவகத்திற்கு பணியாளர்கள்(ஆண்+பெண்) தேவைப்படுகின்றனர். திறமைக்கு ஏற்ற வேதனம் வழங்கப்படும்.

1. உணவு பரிமாறுபவர் (சப்ளையர்)
2. சுத்தம் செய்பவர் (கிளினிங்)
3. சமையல் உதவியாளர்
4. தேநீர் தயாரிப்பவர் (ரீ மேக்கர்)

தொடர்புகளுக்கு :
**077 846 1024, 077 907 9888**

**றொலெக்ஸ் ஹொட்டல்**
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7492)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் ஜெகதீஸ்வரன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.10.1964 | 10.02.2019 |

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 10.02.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் உதயபாலியின் அன்புக் கணவரும் பிரதீப், அனுசியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெயாம்பிகா மற்றும் ஜெயானந்தி, ஜெயக்குமார், ஜெயபாலன், ஜெயதாசன், ஜெயப்பிரதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிரோஜா, கிஷாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் றியானியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2019) வியாழக்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7501)

குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி கல்வி வலயத்தின் அதிபர்களான கிளி/விவேகானந்தா வித்தியாலய அதிபர் திருமதி **ஜெயலக்ஷ்மி மாணிக்கவாசகர்** அவர்களது அன்புத் தந்தையும் கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலய அதிபர் திரு.**ஐ.கேசவன்** அவர்களது அன்புச் சகோதரருமான

## அமரர் ஐயம்பிள்ளை இராமநாதன்

அவர்கள் 11.02.2019 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்**

(C-5481)

# மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 25 - 04 - 1936 | 11 - 02 - 2019 |



## சின்னத்தம்பி கந்தசாமி

3ஆம் வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரம் குமுழமுனை முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி நேற்று முன்தினம் (11.02.2019) திங்கட்கிழமை இறைவன் பாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் மருமகனும் தங்கமணியின் பாசமிகு கணவரும் இராஜகுலசிங்கம் (அதிபர் - மு/உண்ணாப்புலவு வித்தியாலயம்), மனோகரி, மனோகராம்பாள், மதியழகன், மயூரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சி திணைக்களம், வட மாகாணம்), மன்மதன், இராஜகுலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் விஜயநிர்மலா (ஆசிரியை - மு/முஸ்லிம் மகா வித்தியாலயம், தண்ணீரூற்று), சந்திரசேகரன், சுவர்ணா, தேவமைதிலி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), சதீஷா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மதுஷா மற்றும் சர்விதன், மனோசா, கபிந்துஷா, கபிஷாளினி, சங்கவி, மதுரகவி, மதுரன், சரணி, பிருந்தன், வேணுஜன், கோபிஷா, ரமேஸ் ஆகியோரின் பேரனும் சஜிந்தின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு குமுழமுனை தாமரைக்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7504)

7ஆம் வட்டாரம்
குமுழமுனை,
முல்லைத்தீவு.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:- 0774972971, 0775301966, 0778543887

# மரண அறிவித்தல்

## திருமதி புளோரன்ஸ் தங்கமணி செல்வரட்ணம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.06.1935 | 12.02.2019 |

மன்னாரை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட புளோரன்ஸ் தங்கமணி செல்வரட்ணம் அவர்கள் நேற்று (12.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விறாசுப்பிள்ளை ஜோசப் (முன்னாள் நீதிபதி) - லைசா ஜோசப் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தியடோர் (புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்) - தங்கரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியடோர் செல்வரட்ணத்தின் (சுகாதார பரிசோதகர், மன்னார்) அன்பு மனைவியும் செல்வச்சந்திரன் (யா/மல்லாகம் மகா வித்தியாலயம் - உடற்கல்வி ஆசிரியர்), சேனி செல்வரட்ணம், சிந்தியா (வலம்புரி பத்திரிகை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றூபா (Northern Hospital), C.T.செல்வரட்ணம் (முகாமைத்துவ உதவியாளர்), ராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜனனி, டினக்ஷி, தனுசன், அனோலிக்கா, இமாலிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இரட்ணராஜா, செல்வரட்ணம் (SP, CID) மாணிக்கசிங்கம் (Chief Burner Cement Factory, KKS), S.S.ஜோசப், (DIG Police), எரிக் ஜோசப் (Kernal, Army) தங்கரட்ணம், நேசரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தியடோர் பாலரட்ணம், சாமினி பாலரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று (13.02.2019) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல.881, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுக்கப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5482)

இல. 881,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொ.பே:- 077 591 4617, 077 453 5623

# வெள்ளைவான் கடத்தல்களை நான் அறிமுகப்படுத்தவில்லை

## அமெரிக்காவே முன்னோடி என்கிறார் கோத்தபாய



(கொழும்பு)

**இலங்கையில் வெள்ளைவான் கடத்தல்களை தான் அறிமுகப்படுத்தவில்லை என்றும் அமெரிக்காவே அதனை இலங்கையில் அறிமுகப்படுத்தியது என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.**

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடந்த இரட்டைக்கோபுரம் மீதான (செப்டெம்பர் 11) தாக்குதலுக்குப் பின்னர், உலகெங்குமுள்ள தீவிரவாதிகளை அமெரிக்கா தேடிப்பிடித்து, குவான்டனாமோ தளத்துக்குக் கொண்டு சென்றது.

அப்போது மலேசியர் ஒருவர் இலங்கையில் இருந்தார். அமெரிக்காவின் எவ்பிஐ (FBI) அவரைத் தேடிப்பிடித்தது. அவரை இங்கிருந்து கொண்டு செல்வதற்கு, அவர்கள் நிறைய விடயங்களைச் செய்தார்கள்.

அவரிடம் ஒரு கடவுச்சீட்டைக் கொடுத்து இங்குள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அவரை அனுமதிக்கச் செய்தனர்.

பின்னர் அவரை இலங்கையில் இருந்து வெளியேற்றினர்.

அதற்கு அவர்கள் வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றவில்லை. இது, நாங்கள் அரசாங்கத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் நடந்தது.

இலங்கையில் அல்லது வேறெங்குமுள்ள புலனாய்வு அமைப்புக்கள், தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட சில வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன.

இலங்கையிலும் கூட, அவர்கள் இந்த வழிமுறைகளில் சிலவற்றை நீண்ட காலமாகப் பின்பற்றுகிறார்கள். போரின் போது மாத்திரமன்றி ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது கூட அவர்கள் இவற்றைப் பின்பற்றினர்.

சந்தேகப்படும் நபர் ஒருவர் அத்தகையதொரு வழிமுறையால் விசாரணைக்குக் கொண்டு செல்லப்படுவார். இது என்னால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. இந்த வழிமுறை உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. எமது புலனாய்வு அமைப்புக்கள் பயன்படுத்திய ஹயஸ் வான்கள், வெள்ளை நிறைமுடையவை என்பதால், வெள்ளை வான் என அழைக்கப்பட்டிருக்கலாம்.

அதனை நான் அறிமுகப்படுத்தவில்லை. அதற்கு முன்பிருந்த அரசாங்கங்களின் கீழும் அது நடந்தது.

ஜே.வி.பி. வன்முறைக் காலத்தில், இளைஞர்கள் எப்படி அடையாளம் தெரியாதவர்களால் எப்படி துடைத்தழிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

சாக்குப் பை கதைகள் எல்லோருக்கும் தெரியும். ஆனாலும், நான் ஏன் குறிவைக்கப்படுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை.

1988 / 89 காலப்பகுதியைப் போன்று, எமது ஆட்சிக்காலத்தில் அரசியல் எதிராளிகள் எவரும், கடத்தப்படவில்லை. அந்த நேரத்தில் என்ன நடந்தது என்று 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆபத்தான தீவிரவாதிகளுக்கு எதிரான செயற்பாடுகள் தான் எமது காலத்தில் இடம்பெற்றன.

2005 இல் விடுதலைப் புலிகள் தெற்கில் பாரிய வலையமைப்பு ஒன்றைக் கொண்டிருந்தனர். அவர்கள் பெரியளவில் தென்பகுதியில் ஊடுருவியிருந்தார்கள். அதனால், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவத்தினரைக் கொல்ல முடிந்தது.

நாடு முழுவதும் அவர்கள் போரிட்டார்கள். அவர்கள் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பல இடங்களில் புலனாய்வு வலையமைப்பையும் ஆயுதக் களஞ்சியங்களையும் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் தற்கொலைப் போராளிகளையும் உளவாளிகளையும்கண்டறிய வேண்டியிருந்தது. தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிடும் போது, வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றிக் கொண்டிருக்க முடியாது.

அவர்கள் இரகசியமான கரந்தடி முறையைப் பின்பற்றி வித்தியாசமான முறையில் போரிட்டுக் கொண்டிருந்தனர். நாங்களும் அது போன்ற வழியிலேயே முறியடிக்க வேண்டியிருந்தது.

புலனாய்வு அமைப்புக்கள் செயற்படுவதற்கு அதுவே வழியாக இருந்தது. எனினும், ஐ.தே.கவின் பொய்பரப்புரைகள் அனைத்தும் என் மீது தான் உள்ளன என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்ய சபாநாயகர் அனுமதி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியை கைது செய்வதற்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய அனுமதி வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கு சபாநாயகர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளதாக பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்விவகாரம் தொடர்பாக ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மைத்திரிக்கு ஆப்பு வைத்த பசில்

# பொதுஜன பெரமுன உறுப்பினரையே ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவோம்

## கட்சிக் கூட்டத்தில் திட்டவட்டமாக அறிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே, ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவோம் என்றும் மொட்டு சின்னத்திலேயே போட்டியிடுவோம் என்றும் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான பசில் ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் கம்பஹா மாவட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார் என்று கூறிவருவது தொடர்பாக, பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

எந்தவொரு சூழ்நிலையிலும் பொதுஜன பெரமுன உறுப்பினர் அல்லாத வேட்பாளரை ஆதரிக்கமாட்டோம் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவது, வாக்காளர்களின் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அதனை ஏனைய அரசியல் கட்சிகள் தமது நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதற்குக் கூட்டத்தில் பதிலளித்துப் பேசிய பசில் ராஜபக்ஷ,

"எமது கட்சிக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் கட்சி உறுப்பினர்களின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு முடிவும் எடுக்கப்படாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கிராமங்களில் இருந்தே கட்டியெழுப்பப்பட்டது. கட்சித் தலைவர்கள் உருவாக முன்னரே, வாக்காளர்களால் கட்டியெழுப்பப்பட்ட அரசியல் கட்சி இது.

எனவே கட்சியின் முடிவுகள் அனைத்தும் உறுப்பினர்களின் விருப்பத்துக்கு அமையவே எடுக்கப்படும்.

கட்சியின் தலைவர்களை விட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒரு கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொடர்ந்து செயற்படும்.

வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் உறுப்பினர்களுக்கு துரோகம் செய்யாமலும் இந்தக் கட்சி செயற்படும்.

உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்படாத எவருக்கும் ஆதரவு அளிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களிடம் கட்சித் தலைமை ஒருபோதும் கேட்காது.

எனவே, அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் எமது கட்சியைச் சேர்ந்தவராகத் தான் இருக்க முடியும் என்று உறுதிப்படுத்துகின்றேன். நாங்கள் மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுவோம்" என்றும் பசில் உறுதியளித்துள்ளார். (இ-7)

# கொக்கெய்ன் பயன்படுத்தும் அமைச்சரவை அமைச்சர்கள்

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் தகவல்



(கண்டி)

கொக்கெய்ன் போதைப் பொருள்பயன்படுத்தும் அமைச்சரவை அமைச்சர்கள் இருக்கின்றார்களென, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைக்கப்பட்டு வரும் கண்டி - குருநாகல் அதிவேக நெடுஞ்சாலை கண்காணிப்பு விஜயத்தை நேற்று முன்தினம் மேற்கொண்ட போதே ரஞ்சன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாகந்துரே மதூஷை கைது செய்த விடயத்தில் பூரண பொறுப்பு பொலிஸ் விசேட படையணியின் கட்டளையிடும் அதிகாரி லத்தீப்பையும் அதற்கான கௌரவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் சாரும் எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

மேலும்போதைப்பொருள் வர்த்தகர்கள் தனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்த அவர், போதைப் பொருளுக்காக செயற்படும் கலைஞர்களுடன் தனக்கு கொடுக்கல்-வாங்கல் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் பல அரசியல்வாதிகளுக்கு மதூஷுடன் தொடர்புள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நல்லூர் பிரதேச சபை

## அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

முகாமைத்துவசேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டு 2013.01.01 ஆம் திகதியில் உள்ளவாறான நல்லூர் பிரதேசசபைக்குஅனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங் களுக்கமையவும் பிரதமசெயலாளர் அவர்களின் NP/01/02/03/01/14 இலக்க 2019.01.19 ஆம் திகதிய கடிதத்திற்குஅமைவாகவும். சுகாதாரத் தொழிலாளி பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரியஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையு டையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவி | தரம் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| 01 | சுகாதாரத்தொழிலாளி | III | 02 |

**01. சம்பளங்கள்**

25.01.2008 ஆம் திகதியஅரசாங்கநிர்வாகசுற்றறிக்கை இல 03/2016 இன் அட்டவணை 1 இற்கமைய இப்பதவிகளுக்குரியமாதாந்தசம்பளஅளவுத்திட்டம் (24250-10X250-10X270-10X300-12X330-36410) PL-1-2016 ஆகும். எனினும் சுற்றறிக்கையில் அட்ட வணை 11 இன் படி சம்பளம் வழங்கப்படும்.

**02. சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதாகும்.
2. விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட காலத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப் படுவார்கள்.

**03. சேவை நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகயன்று 18 வயதுக்கு குறையாத வராகவும் 45 வயதிற்குமேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்
4. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரவசிப்பிடம் கொண்ட வராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இவ்விண்ணப்பம் முடிவுத்திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசித்தல் வேண்டும் (வதிவிடச்சான்றிதழ்) மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**04. கல்வித் தகைமைகள்**

கல்விபொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:சுகாதாரத் தொழிலாளி பதவிக்கு ஆகக் குறைந்தது தரம் 8 சித்திபெற்றவர்களும் விண்ணப்பிக்கமுடியும் ஆயினும் மேற்கூறிய கல்வித்தகைமைஉடையோரிடம் இருந்து பொருத்தமான, போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத் திலேயே இவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

**05. தெரிவு செய்யப்படும் முறை**

தெரிவானது அங்கீகரிக்கப்பட்டநேர்முகப்பரீட்சைக் குழுவினால் வழங்கப்படும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**06. விண்ணப்பிக்கும்முறை**

1. நல்லூர் பிரதேசசபையில் ரூபா 100/=Vat (15%),NBT(2%) இனை செலுத்தி விண்ணப்பபடிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் தெளிவாக பூரணப்படுத்தி "செயலாளர். நல்லூர் பிரதேசசபை.14/05 கருவேப்புலம் வீதி, கொக்குவில்" என்றமுகவரிக்குபதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
3. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல்வேண்டும்.
4. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தும் விண் ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.
5. ஆட்சேர்ப்புத் திட்டவிதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்குமுன்னரோ. நியமனத்தின் பின்னராகவோ, நியமனத்தின்போதோ. முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யான தாக தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நிய மனமும் இரத்துச் செய்யப்படும்.

**07 விண்ணப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத் தரின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

**09. விண்ணப்ப முடிவுத்திகதி**

பூர்த்திசெய்யப்பட்டவிண்ணப்படிவங்கள் 2019.03.06ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் காலதாமதமாகும் மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டபின்னர் அல்லதுகோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப் பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் அல்லது இரத்து செய்யும் அனைத்து அதிகாரமும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளருக்குஉண்டு.

சு.சுதர்ஜன்
செயலாளர். நல்லூர் பிரதேச சபை.
13.02.2019 (C-5479)

# வெற்றியை நெருங்குகிறது இங்கி.,



சதமடித்த மகிழ்ச்சியில் இங்கிலாந்து அணித் தலைவர் ரூட்

அணித் தலைவர் ஜோ ரூட் சதம் கடந்து அசத்த, மே.தீவுகள் அணிக்கு 485 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இங்கி லாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகள் முடிவில் மே. தீவுகள் அணி ஏற்கெனவே தொடரை வென்று விட்டது.

மூன்றாவது மற்றும்கடைசி டெஸ்ட் செயின்ட் லூசியா வில் நடைபெறுகிறது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 277, மே. தீவு கள் 154 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன் னிங்சை ஆரம்பித்த இங்கி லாந்து அணிக்கு ரோரி பேர்ன்ஸ் (10), ஜென்னிங்ஸ் (23) ஏமாற்றினர். டென்லி (69) அரைச்சதம் கடந்தார். அணித் தலை வர் ஜோ ரூட், பட்லர் ஜோடி சிறப்பாக விளையாடியது.

நான்காவது விக்கெட்டுக்காக 107 ஓட்டங் களைச் சேர்த்தபோது, அரைச்சதம் அடித்த பட்லர் (56) ஆட்டமிழந்தார். பொறுப்புடன் செயற்பட்ட அணித் தலைவர் ரூட் டெஸ்ட் அரங்கில் 16ஆவது சதம் கடந்தார். இவர் கேப்ரியல் பந்தில் 122 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸ் தன் பங்கிற்கு கைகொடுக்க,

இங்கிலாந்து அணி இரண்டாவது இன் னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஸ்ரோக்ஸ் (48) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனையடுத்து 485 ஓட்டங்கள் என்ற கடின இலக்குடன் மே.தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது.

ஆரம்ப வீரர் காம்ப்பெல் டக் அவுட்டா னார். அண்டர்சன் 'வேகத்தில்' பொறுப்புத் தலைவர் பிராத்வைட் (8), டரன் பிராவோ (0) சிக்கினர். உணவு இடைவேளையின் போது மே.தீவுகள் அணி 2வது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங் களை எடுத்திருந்தது. சேஸ் (8), ஹெட்மயர் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# ரெய்னாவுக்கு என்ன நடந்தது

இந்திய கிரிக்கெட் வீரர் ரெய்னா (வயது-32) ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணிக்காக விளையாடுகிறார். சமீபத்திய போட்டிகளில் இவர் இந்திய அணியில் சேர்க்கப்படவில்லை. கடந்த 11ஆம் திகதி இவர் குறித்து சமூக வலைத்தளத்தில் செய்தி வெளியானது. இதில், 'உத்தர பிரதேசத்தின் கிரிக்கெட் நட்சத்திரம் சாலை விபத்தில் மரணம் அடைந்தார்,' என்ற செய்தியுடன் ரெய்னா படத்தையும் சேர்த்து வெளியிட்டனர்.

இது வேகமாக பரவியது. இதனால் கோபமடைந்த ரெய்னா வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில்,' கடந்த சில நாட்களாக என்னைப் பற்றி தவறான், பொய்யான செய்திகள் வெளியாகின்றன.

கார் விபத்தில் சிக்கியதாக வந்த செய்தி என் குடும் பத்தினரையும், நண்பர்களையும் பெரிதும் காயப் படுத்தியது. தயவு செய்து இதுபோன்ற செய்திகளை கண்டு கொள்ளாதீர்கள், கடவுளின் கருணையால் நான் நலமாக உள்ளேன்.

செய்தி வெளியிட்ட நிறுவனத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. கடும் நடவடிக்கை எடுப்பர் என நம்புகிறேன்,' என தெரிவித்துள்ளார்.



ரெய்னா


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்
திரு. T.G.C. செல்வச்சந்திரன் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி தங்கமணி செல்வரட்ணம்**



**தோற்றம்: 1935.06.16 மறைவு: 2019.02.12**
அவர்கள் நேற்று (12.02.2019) காலமான
செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம்**
**யா/மல்லாகம் மகா வித்தியாலயம்** (7505)

# உரிய நேரத்தில் மன்றுக்கு வருகை தர வேண்டும்

## கோத்தாவை எச்சரித்த நீதிமன்றம்

(கொழும்பு)

உரிய நேரத்தில் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காத காரணத்தால் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது.

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 33.9 மில்லியன் ரூபா பணத்தை நம்பிக்கை மோசடி செய்தமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, முதல்பிரதிவாதியானகோத்தபாய மன்றில் ஆஜராகவில்லை. அத்துடன் 6 ஆம் பிரதிவாதியும் மன்றில் இருக்கவில்லை.


இந்நிலையில் பெயர் வாசிக்கப்பட்டபோது 2,3,4,5,7 ஆம் பிரதிவாதிகள் மட்டுமே பிரதிவாதிக் கூண்டில் ஏறினர்.



இதன்போது 6 ஆம் பிரதிவாதிக்கு சத்திர சிகிச்சை ஒன்று செய்யப்பட்டுள்ளதாக கூறி அவரது மருத்துவ சான்றிதழ் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும்கோத்தபாய மன்றில் ஆஜராகவில்லை. இந்நிலையில் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்திலேயே கோத்தா மன்றுக்கு வருகை தந்தார். வரும் வழியில் வாகன நெரிசல் காரணமாக தன்னால் உரிய நேரத்துக்கு மன்றுக்கு வருகை தர முடியாமல்போனதாக கோத்தா தரப்பில் மன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான கோத்தபாய உரிய நேரத்தில் மன்றில் ஆஜராக எச்சரிக்குமாறு அரசின் சிரேஷ்ட பிரதி சொலிசிற்றர் ஜெனரால் திலீப பீரிஸ் நீதிபதிகளை கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றின் தலைமை நீதிபதி சம்பத் அபேகோன், அனைத்து பிரதிவாதிகளும் வழக்கு விசாரணைகளின் போது உரிய நேரத்தில் மன்றில் ஆஜராக வேண்டும் என எச்சரித்தார். (இ-7)




# இலங்கை எதிர்கொள்ளும் அபிவிருத்தி சவால்கள் குறித்து ஆராய வேண்டும்

## உலக வங்கி துணைத்தலைவர் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இலங்கை எதிர்கொள்ளும் அபிவிருத்தி சவால்கள் குறித்து ஆராய எதிர்பார்த்துள்ளதாக, தெற்காசிய பிராந்தியத்திற்கான உலக வங்கியின் துணைத் தலைவர் ஹார்ட்விக் ஸ்கேஃபர் தெரிவித்துள்ளார்.

தனது இலங்கைக்கான விஜயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

நடுத்தர வருமானம் கொண்ட நாடாக முன்னேறுவதற்கு இலங்கை முயற்சித்து வருகின்ற நிலையில், பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இதனால், அபிவிருத்திக்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்விஜயத்தின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்களை அவர் சந்திக்க எதிர்பார்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK-IN-INTERVIEW

Walk in interview for appointment of **University Medical Officer (on Assignment Basis)** will be held on 21.02.2019 at 09.00 a.m at the Board Room of this University.

**Qualifications:**
Medical Degree of a recognized University with at least three (03) years experience as Medical Practitioner. Retired Medical Practitioner will also be considered on need basis.

**Note:**
The selected Medical Officers should be prepared to work in the Health Centre- University of Jaffna, Siddha Medicine Unit, Kaithady and Ramanathan Academy of Fine Arts, Maruthanamadam of this University.

**Rate of payment**: Rs.610.00 (maximum of 7 hours per day)
**Selection**: By structured interview
Candidates are requested to appear with relevant certificates, NIC and **self prepared applications.**

**Registrar,**
**University of Jaffna.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 12.01.2019 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் தர்மலிங்கம் சண்முகதாஸ் (சின்னராசு)



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 13.02.2019 புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5475)

இல.97/8, A.V.றோட்,
அரியாலை.

குடும்பத்தினர்
077 408 0578, 077 041 7254

## இராசி பலன்

13.02.2019
மாசி 01, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
அட்டமி முற்பகல் 11.11 மணிவரை
கார்த்திகை மாலை 6.12 மணிவரை
சுபநேரம் 5.04-6.34 மணிவரை
இராகுகாலம் 12.34-2.04 மணிவரை
அட்டமி - நவமி
வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | செவ் | சந் | |
| சூரி, புத | | | ராகு |
| கேது | | | |
| சனி சுக். | குரு | | |

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

**மேடம்** காலைப்பொழுதில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** எடுத்த காரியத்தை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்** வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான நாள்.

**சிம்மம்** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கன்னி** மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** தேவையற்ற பண விரயங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், உறவினர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**தனுசு** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்** வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், உறவினர்கள் மத்தியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்கள் ஏற்படலாம்.



யாழ்ப்பாணத்தில் இந்தியக் கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ்.வலம்புரி ஹோட்டலில் நடைபெற்றது. இதில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சங்கர் பாலசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடமாகாண வர்த்தகர்களிடமிருந்து 11 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வர்த்தகர்களிடமிருந்து 11 இலட்சத்து 40 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக வடமாகாணப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த தை மாதம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்ட திட்டங்களை மீறிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு,மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கெதிராக அந்தந்த மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 81 வர்த்தகர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 2 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் வவுனியா மாவட்ட வர்த்தகர்களுக்கெதிராக 79 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 3 இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவும் கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்களுக்கெதிராக 31 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் 31 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 49 ஆயிரம் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு இரண்டு லட்சத்து 500 ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இரண்டு மாதத்திற்குள் 15 வீதி விபத்துக்கள்

## நெல்லியடியில் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 2 மாத காலத்துக்குள் 15 வீதி விபத்துக்களில் இருவர் மரணமடைந்ததாக நெல்லியடிப் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லைச் சந்தி தொடக்கம் மாலுசந்திவரை, முள்ளி தொடக்கம் உடுப்பிட்டி மேற்குப் பகுதி வரையான பகுதிகளில் இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் பலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவ் விபத்துக்களில் பெரும்பாலானவை மஞ்சள் கோட்டுப் பகுதி சமிக்ஞை விளக்குகளை கவனிக்காமை, தொலைபேசி உரையாலுடன் வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் அணியாமை போன்ற காரணங்களால் விபத்துக்கள் இடம்பெற்றதாக அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-10-60)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

முடிவடைந்த மற்றும் உரிமைகோரப்படாத ஒரு தொகுதி மணலின் ஏலவிற்பனை 2019.02.16 அன்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 9 மணியிலிருந்து விற்பனைக்கான மணலை மன்றின் பதிவாளர் முன்னிலையில் பார்வையிட முடியும் என்பதுடன், ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தமது தேசிய அடையாள அட்டையையும் கொண்டுவருதல் மிக அவசியமாகும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# தேசிய வாசிப்பு மாத மாநாடு, கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தேசிய வாசிப்பு மாத, உள்ளூராட்சி மாத நிறைவு நாள் நிகழ்வும் மாநாடும் கண்காட்சியும் நாளை மறுதினம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் வல்வெட்டித்துறை நகர மண்டப மேல் தளத்தில், நகராட்சி மன்றத் தவிசாளர் கோ.கருணானந்தராசா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ கலந்து கொள்வார். (இ-5)

# யாழ்.மத்திய கல்லூரியின் புதிய விளையாட்டரங்கு திறப்பு

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் புதிய விளையாட்டரங்கு திறப்பு விழா கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் ஒலிம்பிக் வீரருமாகிய கலாநிதி என்.எதிர்வீரசிங்கம், கல்வி அமைச்சின் செயற்றிட்ட முகாமையாளர் பொறியியலாளர் ஜே.வாசுதேவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை பிற் பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி. எம்.விமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எப். எக்ஸ்.அன்ரன், கௌரவ விருந்தினராக திருமதி சுசிலா குருமூர்த்தி, (ஐக்கிய இராச்சியம்), திருமதி கம்சினி பிரசாத் (தே.சே. வங்கி), திருமதி சோபினி கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# "வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு சுதந்திரமாக கற்பிக்க இடம்கொடு"

(கொடிகாமம்)

ஆசிரியர்,அதிபர்களின் பல்வேறுபட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்காக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் நாடு முழுவதும் சுவரொட்டி போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. 22 வருட கால சம்பள முரண்பாட்டை நீக்கி ஆசிரியர்களின் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடு! கொள்ளையடிக்கப்பட்ட 30 மாத கால நிலுவை சம்பளத்தை உடன் வழங்கு! படிவங்கள் நிரப்புதல் மற்றும் வெளி நிறுவனங்களின் வேலைகளை கற்பித்தலுக்கு தடையாய் இருக்கின்ற செயல்பாடுகளை நிறுத்தி வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு சுதந்திரமாக கற்பிக்க இடம் கொடு. மேலதிக வேலைகளுக்காக பணியாளர்களை இணைத்துக்கொள்! 2016 க்கு பின்பு நியமனம் பெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதிய சம்பள திட்டத்தை இல்லாமல் செய்திருக்கின்றார்கள்.

எனவே ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களின் ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் பெற்றுக் கொடு! போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சுவரொட்டி போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தீர்வு கிடைக்காத பட்சத்தில் அனைத்து ஆசிரியர், அதிபர்களை ஒன்றிணைத்து தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல வேண்டி ஏற்படும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சு.பிரதீப் தெரிவித்துள்ளார். (இ-7)

# நகுலேஸ்வரர் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கீரிமலை-நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர சுவாமி திருக்கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதியன்று சிவராத்திரி விழாவும் தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளதோடு மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-5)

# வீதியில் கண்டெடுக்கப்பட்ட பணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 40311 எனும் இலக்கத்தைக் கொண்ட பிரசன்னா என்ற உத்தியோகத்தர் பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள வீதியில் கண்டெடுத்த சுமார் 60 ஆயிரம் ரூபாவை நேர்மையாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

குறித்த பணத்தை தவறவிட்டவர்கள் உரிய ஆதாரத்தை காண்பித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (இ-30-89)

# பகுதிநேரக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)


இலங்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பகுதிநேரக் கற்கை நெறிகளான அடிப்படை கணனி பிரயோகம், குளிர்சாதனம் மற்றும் வளிசீராக்கி உபகரண திருத்துனர் ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் எதிர்வரும் 15.02.2019 ஆம் திகதிக்கு முன்னர் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு நிலைய முகாமையாளர் வே.ஸ்ரீகுகன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)



போக்கட்டி அ.த.க பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய நிர்வாக பிரிவிற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்து கொண்டு மாணவத் தலைவர்களுக்கான சின்னங்களையும் வகுப்புத் தலைவர்களுக்கான சின்னங்களையும் சூட்டினார், இந்த நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர்கள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ம.மயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் க.அசோகலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். சின்னம் சூட்டிய மாணவர்களும் ஏனைய மாணவர்களும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தக்கோரி கையெழுத்து வேட்டை





(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாயாக உயர்த்த கோரியும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினை அம்சங்களை செய்து கொடுக்க வேண்டும் என கோரியும் மலையக இளைஞர்கள் அமைப்பு கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் நேற்று டிக்கோயா இன்வெரி தோட்டத்தில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினை அம்சங்களை செய்து கொடுக்க வேண்டும் என கோரியே, மலையகத்தின் அனைத்து பிரதான நகரங்களிலும், தோட்டங்களிலும் இந்த கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மக்கள் மகஜர் ஒன்றை தயாரித்து சேகரிக்கப்படும் கையெழுத்துக்களையும் இணைத்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர், இந்திய உயர்ஸ்தானிகர், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் உட்பட பல முக்கியஸ்தர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## தோட்டத்தொழிலாளர், விவசாயிகள் நலன்சார் வரவு-செலவுத் திட்டமொன்று முன்வைக்கப்படும்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்ந்தாலும் கூட மக்கள் நலன் சார்ந்தும், பொருளாதார சுமைகளில் இருந்து மக்கள் விடுபடக்கூடியதுமான வரவு-செலவுத் திட்டம் ஒன்றினையே அரசாங்கம் இம்முறை முன்வைக்கும் என அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர், விவசாயிகள் நலன்களில் இம்முறை அதிக கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் அரசாங்கத்தின் முழுமையான வரவு-செலவு திட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையில் வரவு-செலவு திட்ட நகர்வுகள் குறித்து வினவிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (4-7)

## பாடசாலை மாணவர்களுக்கு துறைமுகத்தில் சூழலியல் பூங்கா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத் திட்டத்தில் பாடசாலை மாணவர்களைக் கவரும் நோக்குடன் கடலுக்குள் சூழலியல் பூங்கா அமைக்கப்படுமென தேசிய மீன்பிடி அமைச்சின் கருத்திட்டப் பணிப்பாளர் பிரதாப் ரணவீர தெரிவித்தார்.

பருத்தித்துறை துறைமுகத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென அவர் தெரிவித்தார்.

அமைக்கப்படும் சூழலியல் பாதுகாப்புப் பூங்காவில் பாடசாலை மாணவர்களைக் கவரும் நோக்கிலும் துறைமுகம்சார் விடயங்களை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் தரையுடன் இணைந்த கடல் பகுதியில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் மாணவர்களை தெளிவூட்டும் வகுப்பறைத் தொகுதி கடல் வாழ் உயிரினங்களை அறிந்து கொள்வதற்கான காட்சியகம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## கழிவுகள் கொட்ட வேறுகாணி தெரிவு

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபையால் கழிவுகள் கொட்டுவதற்காக முதலில் தெரிவு செய்த இடத்தை தவிர்த்து வேறு காணி ஒன்றை கொள்வனவு செய்வதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகர சபையால் கழிவுகள் கொட்டுவதற்காக வல்லிபுரம்- துன்னாலை வீதியில் காணி ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இது ஆலயத்திற்கு செல்லும் வீதிக்கு அருகாமையில் இருப்பதால் அங்கு கழிவுகள் கொட்ட அனுமதிக்க முடியாது என பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக கலந்துரையாடல் ஒன்று பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ தலைமையில் நடைபெற்றது.

இதில் முன்னர் தெரிவு செய்யப்பட்ட காணியைத் தவிர்த்து அதற்கு அப்பாலுள்ள காணி ஒன்றைத் தெரிவு செய்வதாக தீர்மானித்து சுற்றுச்சூழல் திணைக்களத்திற்கு அறிவிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ. சா. அரியகுமார், பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் இருதயராசா, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன், சுற்றுச்சூழல் திணைக்கள அதிகாரி, பருத்தித்துறை பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)

## கைத்தொழில் முயற்சியாளர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் கைத்தொழில் மற்றும் வணிகப் பிரதி அமைச்சர் புத்திக பத்திரன தலைமையில் இடம்பெறும். (இ-10)

## கிளிநொச்சியில்
## வெள்ள அனர்த்தத்தால் நிலக்கடலை செய்கை பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக நிலக்கடலை செய்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நிலக்கடலைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த போகங்களை விட இப்போகத்தின் போது அதிகளவான நிலப்பரப்பில் நிலக்கடலை செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் பெய்த மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நிலக்கடலை செய்கைகள் பாரிய அளவில் பாதிப்படைந்துள்ளன.

அதாவது கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, அளம்பில், விசுவமடு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளம் காரணமாக நிலக்கடலை செய்கைகளில் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைவிட, தற்போது அறுவடை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இடையிடையே மழையுடனான காலநிலை நிலவி வருவதனாலும் அறுவடைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (9-315)

## முகமாலையில் நேற்று கண்ணிவெடி அகற்றும் பணிகளை பார்வையிட்ட ஜப்பானிய அதிகாரிகள்





(கண்டாவளை)

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் சார்ப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை நேற்று ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டு கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை, வேம்பொடுகேணி, கிளாலி ஆகிய பகுதிகளில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவான சார்ப் அமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்படி குழுவினர் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

நேற்று காலை வந்த மேற்குறித்த குழுவினர் அங்குள்ள ஊழியர்களை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் கண்ணிவெடி அகற்றும் பகுதிக்குச்சென்று அதனைப்பார்வையிட்டு பணிகளின் நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளனர். (9-315)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 56செவ் 7 இல்<br>உயரம்: 5’5”<br>தகைமை/தொழில்: O/L, சுயதொழில்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/9281 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா:52<br>உயரம்:5’4”<br>தகைமை/தொழில்:Computer Engineer,<br>எதிர்பார்ப்பு:Doctor,Engineer,Accountant<br>வெளிநாடு,சைவபோசனம்<br>தொ.இ: G/2312 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 3<br>உயரம்:5’<br>தகைமை/தொழில்:B.Sc,M.Sc,PL.D, Canada<br>எதிர்பார்ப்பு: படித்தபெண், Canada விரும்பத்க்கது<br>தொ.இ: B/9285 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 2<br>கி.பா: 63செவ் 7 ல்<br>உயரம்:5’5”<br>தகைமை/தொழில்:A/L,சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு:தனியார், வியாபாரம், உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/2318 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்:5’5”<br>தகைமை/தொழில்: O/L,சொந்த தொழில்<br>தொ.இ: B/9286 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 4<br>கி.பா:91செவ் 8 இல் உயரம்:5’6”<br>தகைமை/தொழில்: A/L,தனியார் தொழில் எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/2338 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>செவ் 8 ல்உயரம்:5’5”தகைமை/தொழில்:BA,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:கல்வி தகமையுடைய பெண்<br>தொ.இ: B/9289 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1கி.பா: 40<br>உயரம்:5’2”தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரசதனியார், சொந்த தொழில்<br>தொ.இ: G/2347 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சேம்பும், வயல்நண்டும் (சேப்பங்கிழங்கு)


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.Ð(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சேம்பு

தாவரவியற் பெயர்
**Colocasia esculenta**

குடும்பம்
**Araceae**


ஆங்கிலப் பெயர்
**Cocco Yam**

சிங்களப் பெயர்
**Gahata**

பெரிய செடி. தண்டு காணப்பட மாட்டாது. தரைக்கு மேல் ஆனால் அடிப் பகுதி பருத்துக் காணப்படும். முகிழ் (Corn) உடையது தெரியாது. தனியிலை 15-50 சென்ரிமீற்றர் நீளமானது. இருதய வடிவ இலைகள் காணப்படும். இலைக்காம்பு 90-120 சென்ரிமீற்றர் நீளமானது. வெப்ப பிரதேசங்களில், வடிகால்களில், நீர்நிலைகளில் தாராளமாக வளர்ந்திருக்கும்.

ஒரு செடியில் 50-100 கிராம் முகிழ் காணப்படும். செடியை நட்டு 215 நாட்களில் முகிழ்களை அறுவடை செய்யலாம்.

சில கிராமங்களில் வாய்க்கால்களில் உணவுக்காக பயிரிட்டு வளர்க்கிறார்கள். இதனுடைய முகிழ்ப்பகுதியும், மொட்டுக்களும் இலைகளும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை. அதே நேரம் இலைகள் பச்சையாக துவையல் செய்து அல்லது பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிடலாம். உடலுக்கு குளிர்ச்சியையும், பலத்தையும் கொடுக்கக் கூடியது. இதனுடைய இலைகளில் நீர் ஒட்டாது. இதன் இலைகளிலும் முகிழ்ப் பகுதியிலும் நார்ச் சத்துக்கள் அதிகம் இருப்பதால் நீரிழிவு நோயாளிகளும் இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகரித்தவர்களும் தாராளமாக சமைத்துச் சாப்



பிடலாம்.

ஆனால் இதன் மொட்டுக்கள் மூலநோய்க்குச் சிறந்த மூலிகை மட்டுமல்ல சிறந்த மரக்கறி வகையுமாகும்.

சேப்பங்கிழங்கு இனிப்பு சுவையையும், தட்ப வீரியத்தையும் இனிப்பு விபாகத்தையும் உடையது. இலை, குருத்து, மொட்டு என்பன மூலநோய்க்கு சிறந்ததாகும். இரத்த மூலத்திற்கும் சிறந்த மூலிகையாகும். ஆனால் சேம்பின் மொட்டையோ, குருத்தையோ, முகிழையோ சமைக்கும் போது புளிசேர்த்து சமைக்க வேண்டும்.
"சேம்பிற்கு நற்புளியை சேர்த்து சமைத்துண்டால் கூம்பிட்ட மூலமறுங் கூறு"

சேப்பங்கிழங்கு இனிப்பு சுவை, தட்ப வீரியம், இனிப்பு விபாகத்தை உடையதால் புளியுடன் சேர்த்து சமைக்கும் போது இலகுவாக ஜீரணம் அடைகின்றது. சுவையாகவும் இருக்கும்.

இதன் கிழங்குகளை வீக்கங்களுக்கும், பழுக்காத கட்டுகளுக்கும் வைத்துக் கட்டலாம். குளவி, தேள்கொட்டினால் கிழங்கின் சாற்றை கடிவாயிற் தடிப்பாக பூசினால் விஷங்களை அகற்றும்.

சேம்பிற்கு புளி சேர்த்து சமைப்பது மருத்துவ குணங்களை காட்டக்கூடியது. இதனை,

''சிறியார்க் கினியதைக் காட்டாதே,
சேம்பிற்கு புளியிட விடையாதே''

எனும் அனுபவ மொழிமூலம் அறியலாம்.

சித்த மருத்துவத்தில் மூலிகைக்குள்ள மருத்துவப் பண்புகளைப்போல் பல ஜீவப் பொருட்கள் மருந்தாகவும் உணவுப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இதேபோல் சேப்பங் கிழங்கின் மொட்டுக்களும் கழனி நண்டு (வயல்நண்டும்) சேர்த்து கறிசமைத்து சாப்பிடும் போது குடல் சம்பந்தமான நோய்களை நீக்குவதோடு மூலரோகத்திற்கும் சிறந்த மூலிகையாகவும், நண்டுசேர்த்து கறியாகவும் சுவையாகவும் சமைத்து மூலநோயை குணப்படுத்துகின்றது.

நண்டுகளில் பல வகைகள் சித்தமருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன. சமுத்திர நண்டு, சுழி நண்டு, வரப்பு, அல்லது கழனி (வயல்) நண்டு, பால்நண்டு எனப்பல வகைகள் உண்டு. இவையனைத்தும் சிறந்த மருத்துவப் பண்புகளைக் கொண்டது வயல் அல்லது வரப்பு நண்டாகும்.



இந்த நண்டுகள் பித்தகாரி அதாவது பித்த நோய்களை நீக்குவதோடு, வாதக் கடுப்பு, குடலிரைச்சல், குடல் நோய், மூலநோய்களுக்கும் சிறந்ததாகும்.

வயலிலுறு நண்டருந்த வாதக்குடைச்ச
வயவினுமிருக்காதணங்கே-துயிலலொட்டா
வன்சயித்தி பயங்கரப்பன் மன்குடலி
இரசலும்போம்
முன் பயித்தி யங்கதிக்கு முன்.

அதாவது வயல் நண்டின் கறியை புசித்துவரின் வாதக்கடுப்பு, தூங்கவிடாமல் செய்யும் கப நோய்கள், குடலிரைச்சல் இவை நீங்கும்.

எமது பிரதேசத்தில் வயல்வரப்புகளில் மருத்துவ குணங்கள் மிக்க நண்டுகளை சேகரிக்கலாம். கழனி நண்டுகள் அதிகம் பெருத்திருக்காது. அவைகளை சமைத்து உள்ளிருக்கும் சதைகளை உண்பதால் மேற்கூறிய பலனை அடையமுடியும்.

ஆனாலும் சேப்பங் கிழங்கின் குருத்து மொட்டுக்களுடன் வயல் நண்டுகளை சேர்த்து புளிசேர்த்து சமைத்துண்ண மூலரோகம், இரத்த மூலம் நீங்குவதுடன் குடல் நோய்களையும் ஒட்டவிடாது தடுக்கும்.

இதற்கு சேப்பங் கிழங்கு கிடைக்கும் நீர் நிலைகளிலேயே சேம்பின் அடிப்பகுதியில் தாராளமான வயல் நண்டுகளை சேகரித்துக் கொள்ளலாம். இதுவே இயற்கையின் பல்வகைப் பரம்பலுமாகும்.

இதற்கு மஞ்சலடிக்காத சேம்பின் மொட்டுக்களை சேகரித்து சிறிது சிறிதாக வெட்டி வைக்க வேண்டும்.

ஒரு மண் சட்டியில் முற்றிய புளி யங்காய்களை போட்டு சிறிது தண்ணீர்விட்டு நன்றாக அவித்து, பின்பு நன்றாக பிசைந்து வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

வயல் நண்டுகளையும் துப்புரவு செய்து அவித்து வைத்துக் கொள்ள வேண்டும். சிறிது எண்ணெயில் வெங்காயம், உள்ளி, வெந்தயம், பெருஞ்சீரகம், கறிவேப்பிலை போட்டு வதக்கி, வதங்கிய பின் அதனுள் பிசைந்த சேம்பு மொட்டுக்கள், அவித்த வயல் நண்டு, பிசைந்த புளிநீர் விட்டு தேவையானளவு உப்பு, மிளகாய்த்தூள்போட்டு கறியாக சமைத்து எடுத்து பயன்படுத்த மேற்கூறிய பயன்களை பெற்றுக் கொள்ள முடியும்.

வயல் நண்டை ரசமாக வைத்து பயன்படுத்தி வந்தாலும் செரிமானத்தை தூண்டி, இரத்தத்தை தூய்மைப் படுத்தி இரத்தம் கட்டியாவதை தடுக்கும் பண்பு வயல் நண்டு ரசத்திற்குண்டு.






வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் கதிர்காமத்தம்பி சிறீஸ்குமார் தலைமையில் கடந்த 7 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளரும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான சதாசிவம் இராமநாதன் பிரதம விருந்தினர்ாக கலந்து கொண்டார்.
(படங்கள்:-மகாலிங்கம்)

### 53 மில்லியன் ரூபா மோசடி

# மகிந்தானந்தவுக்கு எதிரான வழக்கு

## ஏப்ரல் 30ம் திகதி மீள விசாரணைக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக விசேட நீதாய மேல் நீதிமன்றில் வழக்கு தொடருவது சம்பந்தமாக ஆராய்ந்து கொண்டிருப்பதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பான மனு நேற்று கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இது சம்பந்தமான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு காலம் வழங்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றில் கோரியது.

இந்த வழக்கு தொடர்ச்சியாக தாமதமாக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிவதாக கூறிய நீதவான். முன்னேற்றம் குறித்து ஏப்ரல் 30ஆம் திகதி நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டார்.



மகிந்தானந்த அளுத்கமகே விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் கரம்போர்ட் மற்றும் டாம் போர்ட் கொள்வனவு செய்வதற்கு 53 மில்லியன் ரூபா நிதியை தவறாகப் பயன்படுத்தியதாக கூறி அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய அரசு யோசனை தோற்கடிக்கப்படும்!

## தயாசிறி உறுதி

(கொழும்பு)

தேசிய அரசாங்க யோசனை தோற்கடிக்கப்படும் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி அறிந்துள்ளதால் அதனை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யாதிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

அந்த யோசனை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் உறுதியாக அதனை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பு ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இவ்வாறு தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முற்படுவதற்கு காரணம் கட்சியினுள் காணப்படுகின்ற நெருக்கடியை இல்லாது செய்வதற்காகவே என்று தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)

# நதீமல் பெரேராவின் இரத்த மாதிரியில் போதைப் பொருள் கலந்திருக்கவில்லை

(டுபாய்)

டுபாயில் கைது செய்யப்பட்ட பிரபல பாடகர் அமல் பெரேராவின் மகன் நதீமல் பெரேராவின் இரத்த மாதிரியில் போதைப் பொருள் கலந்திருப்பது உறுதி செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



டுபாய் பொலிஸார் இதனை உறுதி செய்துள்ளதாக அங்கு சென்றுள்ள சட்டத்தரணி உதுல் பிரேமரத்னதெரிவித்துள்ளார்.

பிரபல பாடகர் அமல் பெரேரா மற்றும் அவரின் மகன் நதீமல் பெரேராவுக்காக டுபாய் பொலிஸ் நிலையத்தில் விளக்கமளிக்கும் போது இது தொடர்பில் உறுதி செய்யப்பட்டதாக சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# வினாத்தாள்கள் மாற்றம் தொடர்பில் முறைப்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற அதிபர் சேவையின் தரம் மூன்றுக்கான போட்டிப் பரீட்சையின் போது, நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சை வினாத்தாள்கள் மாற்றி வழங்கப்பட்டுள்ளன என இலங்கை கல்விச் சமூக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, பரீட்சைகள் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிபர் சேவையின் தரம் மூன்றுக்கான போட்டிப் பரீட்சைக்காக புத்தளம் மாவட்டத்தில் தோற்றியிருந்த மூன்று பரீட்சார்த்திகள், தொலைபேசியுடன் பரீட்சை எழுதியமை தொடர்பான விசாரணைகளை பரீட்சைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பல்கலைக்கழகத்தில் மோதல் 3 மாணவர்களுக்கு காயம்

(இரத்மலானை)

இரத்மலானையிலுள்ள பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்த பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் சிலர், அங்கு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சட்ட பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனரெனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது காயமடைந்த மாணவரொருவரை வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்ல முயற்சித்த போது, இந்தச் சம்பவம் வெளியே தெரிந்தால் பல்கலைக்கழகத்துக்கு அவப்பெயர் ஏற்படுமெனத் தெரிவித்த குறித்த பல்கலைக்கழகத்தின் அதிகாரியொருவர் வேரஹெர பிரதேசத்திலுள்ள பல்கலைக்கழகத்துக்குரிய வைத்தியசாலைக்கு குறித்த மாணவனைக் கொண்டு செல்லுமாறு பணித்துள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தை பொலிஸ் நிலையத்துக்கும் அறிவிக்க வேண்டாம் என்றும், இது தொடர்பில் பல்கலைக்கழகத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென்றும் காயமடைந்த மாணவர்களிடம் பல்கலைக்கழக அதிகாரிகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குறை'களை' பதிகம் 17

## வீதிக்குப் பெயரிடல்

மானிடம் வாழவென்றே
மண்ணினில் சேவை செய்தார்
மாண்புறு அரசியல் தந்தோர்
மங்காப் புகழ்கொண்ட தமிழ் மன்னர்
மதிநுட்பம் மிக்கோர்
மா இலக்கியப் பெரும் புலவோர்.
அவர் செய் சேவை அறிய
அன்னவரை நினைவுகூர்ந்து
வீதிக்கும் பிற ஒழுங்கைக்கும்
சாலைக்கும் குறுக்குப் பாதைக்கும்
பெயர் சூட்டிப் பெருமை
கொள்வதே சிறப்பாம்

நம் மண்ணில் வீதிகள் பலவாயினும்
ஆட்டொழுங்கை, மாட்டொழுங்கை
கிடாய் விழுந்த ஒழுங்கை
பேய் அடித்த பெருவீதி
மதவடி ஒழுங்கை
மாடன் நட்மிடும் பாதை
என்றெல்லாம் வெறும் பெயர்சூட்டி
வீண்பெயர் கொண்டு அழைப்பர்

ஐயகோ! முதலாம் இரண்டாம் ஒழுங்கை என்பார்
முத்தட்டு வீதி என்பார்
முனி அடித்த சந்தி என்பார்
இவையெல்லாம் ஏன்தான்

பண்டாரவன்னியரசன்
ஈழத்துராசா எல்லாளன்
காந்தியவாதி கதிரவேலு அப்பு
சிந்தனைச் சிற்பி கைலாசபதி
முதல் துணைவேந்தர் வித்தியானந்தன்
சிவத்தமிழ் அன்னை
ஆண்டகை தியோகுப்பிள்ளை
மதுரைப் பண்டிதர் சச்சிதானந்தம்
சித்த வைத்திய பூபதி இராசையா
நாடகக் கலைஞர் வி.வி. வைரமுத்து
பாசெய் அண்ணாவிமார்
சிறந்த அதிபர் பூரணம்பிள்ளை
ஒரேற்றர் போன்றோர்
இன்னும் பலர் பெயர்
வீதிக்குச் சூட்டி வைத்தால்
யார் இவர் என்று
எம் இளவல்கள் கேட்டறிந்தால்
அதுவே வெற்றி என்பேன்

ஆகையால் அன்புசால்
சபைத் தவிசாளர்களே!
நகர பிதாக்களே!
மாநகர முதல்வரே!
ஆவன செய்வீர்
தன்னலம் பாராது இத்தரணி வாழ
புண்ணியம் செய்தார் பெயரை
வீதிக்கும் ஒழுங்கைக்கும் சூட்டுதலால்
அன்னவர் ஆசியும் கிடைக்கும்
அவர் வழியில் நம்மவரும்
போலச்செய்வர் இது திண்ணம்
ஆதலால் அத்தனை வீதிக்கும் ஒழுங்கைக்கும்
நல்லார் பெயர் சூட்டுக
நம் இனம் வாழட்டும்

-கூத்தனார்-

# ஆயிரம் ரூபா அமைப்பு போராட்டத்திற்கு அழைப்பு

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி எதிர்வரும் 17 ஆம் திகதி ஹற்றனிலும், 24 ஆம் திகதி தலவாக்கலையிலும் மக்கள் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக 1000 ரூபா அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே 1000 ரூபாய் அமைப்பினரினால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளமாக 1000 ரூபாய் பெற்றுத்தரக்கோரி தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இறுதியில் தொழிற்சங்கவாதிகளால் வெறுமனே 20 ரூபாய் சம்பள உயர்வை மாத்திரமே பெற்றுக்கொடுக்க முடிந்தமை கவலையளிப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# மாசி மாத இராசிபலன்கள்



## 13.02.2019 - 14.03.2019

விளம்பி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். இதனால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடு செயற்பட்டு உயர் நிலையை அடைய வழிவகுத்துக் கொள்வீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

மாதத் தொடக்கத்திலேயே ராகு- கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இந்தப் பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சி உங்களுக்கு மிகுந்த நன்மையை வழங்கும். சகாய ஸ்தானமான 3ஆம் இடத்திற்கு ராகு வருவதால், அனைத்து காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் வளத்தை, ராகு மேம்படுத்துவார். அதே போல் கேது, தனுசு இராசிக்கு செல்கிறார். அது உங்கள் இராசிக்கு 9ஆம் இடம். இதனால் முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். வேதனைகள் நீங்கும். தந்தை வழியில் ஏற்பட்ட பிரச்சினை தீரும். தூர தேச பயணத்தால் ஏற்பட்ட தொல்லை அகலும். கையில் எடுக்கும் காரியங்களில் நற்பலன் கிடைக்க, சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

அஷ்டமத்தில் குரு இருப்பதால், சுப விரயங்கள் அதிகரிக்கலாம். தவிர தன ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பொருளாதார பற்றாக்குறை அகலும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பஞ்சமாதிபதி சூரியனும், 6இற்கு அதிபதி புதனும் இணைந்து லாப ஸ்தானத்தில் இருப்பது யோகம் தான். 'பிள்ளைகளுக்கு படித்த படிப்புக்கு ஏற்ப வேலை கிடைக்கவில்லையே' என்ற கவலை இனி மாறும். குடும்பத்திற்கு அவர்களின் மூலமாக உதிரி வருமானம் வந்து சேரும். தனாதிபதி சுக்கிரன் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பதும் ஒரு வகையில் நன்மையை வழங்கும்.

### மகர சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 25ஆம் திகதி மகர இராசிக்கு, சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பத்தாம் இடத்தில் சஞ்சரிப்பது நன்மை தான். 'வாழ்க்கைத் துணைக்கு படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லையே' என்ற கவலை




## திறமை பளிச்சிடும் நேரம்!

மாறும். அதே நேரம் உத்தியோகத்தில் இருப்பவர்கள், உன்னதமான நிலையை அடையப் போகிறார்கள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். அரசுப் பணிக்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கும். கல்யாணக் கனவு நன வா கொள்வீர்கள். சொத்து வாங்கும் யோகம் உண்டு.

கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்பு, பதவி கிடைக்கும்.

### அதிசார குருவின் பலன்

குரு பகவான், மார்ச் 13ஆம் திகதி தனுசு இராசிக்கு அதிசாரமாக வருகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அப்பொழுது அவருடைய பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. அதிசாரமாக தனுசு இராசிக்கு வரும்பொழுது உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். அதன் மூலம் இல்லம் தேடி நல்ல பலன்கள் வந்து சேரும். நினைத்த காரியத்தை நினைத்தபடி உடனடியாக செய்து முடிப்பீர்கள். தடைகள் அகலும். தனித்து இயங்கும் ஆற்றல் உருவாகும். கடை, திறப்பு, கட்டடத் திறப்பு நடைபெறும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் வந்துசேரும். அந்த நேரத்தில் குரு மங்கள யோகமும் செயற்படுவதால், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். தவிர குருவின் பார்வை 3, 5 ஆகிய இடங்களிலும் பதிவதால், உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். கடன் சுமை குறையும். வழக்குகள் சாதகமாகும். வருமானம் திருப்தியளிக்கும்.

பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வரும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். பூர்வீகச் சொத்து இலாபம் தரும். இந்த மாதம் சிவராத்திரி அன்று சிவனையும், செவ்வாய் தோறும் முருகப்பெருமானையும் வழிபட்டால் வாழ்வில் முன்னேற்றம் கூடும்.



### பெண்களுக்கான பலன்கள்

உங்கள் இராசிநாதன் செவ்வாய், இராசியிலேயே பலம்பெற்று சஞ்சரிப்பதால், யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள், இப்பொழுது படிப்படியாக நடைபெறும். முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் கூடும். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். தாய் மற்றும் உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். தொழில் தொடங்குவது, வீடு கட்டுவது, அரசுப்பணிக்கான முயற்சிகள், அதிசார குருவின் சஞ்சார காலத்தில் வெற்றியாகும். தனுசு இராசிக்கு வரும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். பணி நிரந்தரம், கூடுதல் சம்பளம் கிடைக்கும் நேரமிது. சிவராத்திரி அன்று விரதமிருந்து சிவனை வழிபடுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சனியோடும் கேதுவோடும் இணைந்து அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் குருவின் அருட்பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. மாதக் கடைசியில் குரு பகவான் அதிசார கதியில் அஷ்டம ஸ்தானத்திற்கே செல்கிறார். அங்ஙனம் செல்லும் பொழுது 'விபரீத ராஜயோகம்' அடிப்படையில், உங்களுக்கு அற்புதமான பலன்களை அள்ளிக் கொடுப்பார்.

மாதத் தொடக்க நாளிலேயே ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. இந்தப் பெயர்ச்சியின் விளைவாக எண்ணற்ற நற்பலன்கள் வந்து சேரும். நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும். இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், இப்பொழுது 2ஆம் இடத்திற்கு வருகிறார். எனவே நிதிப் பற்றாக்குறை இனி ஏற்படாது. நேசித்த சொந்தங்கள் யோசிக்காது வந்து உதவி செய்வார்கள். பக்குவமாகப் பேசிக் காரியங்களை சாதித்துக்

அதே நேரத்தில் அஷ்டமத்தில் கேது வந்திருக்கிறாரே என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். இஷ்ட தெய்வங்கள், குலதெய்வங்கள், தசாபுத்திக்கேற்ற தெய்வங்களை வழிபடுவதோடு, நாகதோஷ நிவர்த்திப் பரிகாரங்களையும் நல்ல நேரம் பார்த்து நீங்கள் செய்தால் தேகநலன் சீராகும். செல்வ நிலையும் உயரும். யோக வாய்ப்புகளும் படிப்படியாக வந்து சேரும். கடந்த காலங்களைக் காட்டிலும் இனிவரும் காலம் வளமானதாகவே இருக்கும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஒரு சில காரியங்களில் தாமதம் ஏற்படத்தான் செய்யும். அதுபற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம். தாமதம் ஏற்பட்டாலும் முடிவில் நல்லவிதமாக காரியங்கள் நிறைவேறும். சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுங்கள். அதோடு சிவராத்திரி அன்று சிவ வழிபாடுகளில் கலந்து கொள்வதோடு, குலதெய்வ வழிபாட்டையும் மேற்

## பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும்!

கொள்ளுங்கள். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும்.

### மகர சுக்கிரன் சஞ்சாரம்

பெப்ரவரி 25ஆம் திகதி மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், 6இற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். அவர் 9ஆம் இடமான மகரத்திற்கு செல்லும் பொழுது, பூர்வ புண்ணியத்தினால் உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்களைக் கொண்டு வந்து சேர்ப்பார். குறிப்பாக தந்தை வழி உறவில் இருந்த [illegible]ரிசல் அகலும். தீர்த்த யாத்திரைகள் [illegible]ம் சூழல் அமையும். வீட்டில் உள்ள முதியவர்கள் காசி, ராமேஸ்வரம் என்று செல்ல ஏற்பாடுகள் செய்வீர்கள். ஆலயத் திருப்பணிகள் செய்யும் யோகமும் ஒரு சிலருக்கு கைகூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப், புதிய வாகனம் வாங்கி மகிழ்வீர்கள்.

### குருவின் அதிசார இயக்கம்

மாதத் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். தடைகளை முறியடிக்கும் ஆற்றல்




குருவின் பார்வைக்கு உண்டு. எனவே கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். அதே நேரத்தில் மாதக் கடைசியில் குரு பகவான், அஷ்டமத்திற்கு வருகிறார். மார்ச் 13ஆம் திகதி அதிசார கதியில் தனுசு இராசிக்கு வந்து, அங்கு சில மாதங்கள் இருக்கிறார். அப்பொழுது அதன் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றது. அந்த நேரத்தில் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த தடைகளும், தாமதங்களும் அகலும். நீண்ட நாள் வசூலாகாத பாக்கிகள் வசூலாகும். இடம் வாங்கிப் போட்டுப் பல வருடங்களாகியும் வீடு கட்ட முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது கைகூடும் நேரம் இது. தாயின் உடல் நலம் சீராகும். உத்தியோகத்தில் இடமாற்றம், இலாகா மாற்றம் போன்றவை சம்பள உயர்வோடு கிடைக்கும். ஒரு சிலருக்கு நீண்ட தூரப் பயணங்கள் கூட எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

இம்மாதம் மாசி மகத்தன்று முருகப் பெருமானை வழிபடுவதோடு பிரதோஷ நாட்களில் நந்தியை வழிபாடு செய்யுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொடக்கத்தில், உங்கள் இராசி மீது குரு பார்வை இருப்பதால், மனக்குழப்பம் அகலும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்ப்பீர்கள். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் நல்லவிதமாக முடியும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு திருப்திகரமாக இருக்கும். மாதக் கடைசியில் குரு பகவான் அதிசார கதியில் தனுசு இராசிக்குச் செல்லும் பொழுது, சுப விரயங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். வீடு, வாகனம் வாங்க நினைத்தவர்களுக்கு, அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சிவனுக்குரிய பதிகம் பாடி சிவராத்திரியன்று சிவனையும், உமையவளையும் வழிபடுங்கள்.

(தொடரும்...)

### அரச காணி பங்கீட்டளிப்பு முறையில் மக்கள் அதிருப்தி

# நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு ஆளுநரிடம் மன்னார் பிரஜைகள் குழு கோரிக்கை

மன்னாரை பொறுத்தமட்டில் அரச காணி பங்கீட்டளிப்பு முறைகள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதால் இவை முறையாக பரிசீலிக்கப்பட்டு தேவைப்படுவோருக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவினரால் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஆளுநர் சபையினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் ஒரு சில குறைபாடுகளை சீரமைக்கும் நோக்குடன் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின் போதே மேற்குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுடைய கோரிக்கையில்,

மன்னாரில் உள்ள அரச காணிகளின் விபரம் தொடர்பாக இங்குள்ள சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் வினவுகின்றபொழுது அவர்களால் சரியான விபரங்களை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர்.

அரச காணிகளின் விபரங்களையும் பிரதேச செயலக அதிகாரிகள் சரியான முறையில் வழங்கவில்லை. ஆனால் அவர்கள் சட்டத்துக்கு புறம்பான முறையில் காணிகள் வழங்கப்பட்டு வருவது கண்கூடாக இருக்கின்றது.

ஆகவே 1983 ஆம் ஆண்டுக்குப் பின் வழங்கப்பட்ட அரச காணிகளின் விபரங்களை சேகரிக்க வேண்டிய அவசியம் சம்பந்தமாகவும் முன்வைக்கப்பட்டது.

மேலும் அரச வீட்டுத்திட்டமானது போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் விதவைகள் குறைவான வருமானமுள்ளவர்களுக்கும் புனர்வாழ்வு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் முறையாக பகிர்ந்தளிக்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இப்பகுதியில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லாது கால்நடை வளர்ப்போர் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். ஏற்கனவே கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலங்களில் சட்டவிரோதமாக விவசாயம் செய்வோரை அதிகாரிகள் கண்டுகொள்ளாது இருப்பது வேதனைக்குரியது. இதுவிடயமாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்வும் வேண்டப்பட்டது.

அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களான வீதி அமைத்தல், குடிநீர் வழங்கல், வீதி விளக்குகள் பொருத்துதல், வாசிகசாலை, பொது நோக்குமண்டபங்கள் அமைத்தல், சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் எல்லா கிராமங்களுக்கும் சமமாக சென்றடைவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். பாடசாலைகளில் பொருத்தமான பாடங்களுக்கான ஆசிரியர் ஆளணிகளை வழங்குவதற்கும் பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகள் பௌதீக வள வசதிகளை தேவைக்கேற்ப வழங்குவதற்கும் ஆவன செய்யப்படல் வேண்டும் என கோரப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களினால் நடத்தப்படும் பிரத்தியேக கட்டண வகுப்புக்கள் எமது கலாசார மற்றும் சமய அனுஷ்டானங்களுக்கு இடமளிக்கும்வண்ணம் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடைபெறுவதை தடை செய்ய வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் கால்நடைகள் கால்வாய் என்ற நோய்க்கு உள்ளாகி நாளுக்கு நாள் இறந்து வருகின்றன. கால்நடைகள் திடீர் நோய்களினால் இறப்பதைத் தடுப்பதற்குரிய விரைவான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் இரவு நேரங்களில் வீதிகளில் கால்நடைகள் நிற்பதால் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன் பல வீதி விபத்துக்களும் நடைபெறுகின்றன. எனவே உரிய அதிகாரிகள் மூலம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தமது கோரிக்கையை ஆளுநரிடம் முன்வைத்துள்ளனர். (9-285)

# முல்லைத்தீவில் கால்நடைகளுக்கான மருத்துவ சேவைகளைப் பெறுவதில் சிரமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பண்ணையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வருமானம்பெறும் வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்பு காணப்படுவதுடன் அதிகளவான மக்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தற்போது கால்நடைகளுக்கு ஒருவித நோய் பரவி வருவதுடன் கால்நடைகளும் இறக்கின்றன.

இவ்வாறு பாதிக்கப்படும் பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான வைத்திய சேவையை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பகுதியில் கால்நடைகளுக்கான நோய் தற்போது அதிகரித்துள்ள நிலையில் நோய் தொடர்பில் சிகிச்சை பெறும் நோக்கில் மாந்தை கிழக்கு கால்நடை வைத்திய நிலையத்திற்குச் சென்று சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டாலும் வைத்தியருக்குரிய வாகன வசதிகள் இல்லையென்பதை காரணம் காட்டி சிகிச்சை வழங்குவதால் தாமதங்கள் ஏற்படுகின்றன.

சேவை பெறச்செல்லும் பண்ணையாளர்களைவாகன வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு தங்களை கேட்பதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளதுடன், வாகன வசதிகளே இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதியில் வாழும் தாங்கள் இவ்வாறு வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு வாகன வசதிகளை ஏற்படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளரிடம் இது தொடர்பில் கேட்டபோது மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட சில கால்நடை வைத்திய சேவை நிலையங்களுக்கு மாத்திரமே வாகன வசதிகள் உண்டு. மாந்தை கிழக்கு போன்ற அலுவலகங்களுக்கு வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் மேற்படி பிரச்சினை காணப்படுகின்றன என்று தெரிவித்தார். (9-315)

# கரைச்சி பிரதேச சபையின் செயற்பாட்டைக் கண்டித்து பொதுமக்கள் சிலர் எதிர்ப்பு






(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரால் கரடிப் போக்குச் சந்திக்கருகில் வழங்கப்பட்ட வியாபார நிலையங்கள் தொடர்பில் அப்பகுதி பொதுமக்கள் சிலர் நேற்று முன்தினம் திங்கட் கிழமை கரடிபோக்குச் சந்தியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கரைச்சி பிரதேச சபைக்குரிய காணியை கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் தன்னிச்சையாக வசதி படைத்தவர்களுக்கு வியாபார நிலையம் அமைப்பதற்கு வழங்கி விட்டார். அவர் கிளிநொச்சி ஏ-9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள பெறுமதி மிக்க காணிகளையே இவ்வாறு வழங்கியுள்ளார் என தெரிவித்து குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் "தவிசாளரே! எமது கிராமத்தில் எமக்கு முன்னுரிமையா? பணமுள்ளவர்களுக்கு முன்னுரிமையா? கரைச்சி பிரதேச சபையே! நிறுத்து நிறுத்து அநீதியான செயற்பாட்டை நிறுத்து" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

தமது கிராமத்திலுள்ள காணியை கிராம மக்களின் வாழ்வாதாரத் தேவைகள் அல்லது பொதுத்தேவைகளுக்கு வழங்குவதாக தெரிவித்து வந்த நிலையில் திடீரென ஐந்து தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே சபையானது இவ்வாறு வியாபார நிலையங்களை வழங்குவதாயின் சபையின் அனுமதி பெறப்பட்டு, பத்திரிகைகளில் கேள்விக் கோரல் விடப்பட்டு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அந்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனத் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் ஊடகங்களுக்கு பதிலளிக்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் கடைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (9-315)



வவுனியா இறம்பைக்குளம் ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்பாளின் பதினோராம் ஆண்டு மஹோற்சவப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆலய மஹோற்சவக் குரு சிவஸ்ரீ முத்து ஜெயந்தி நாத குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.





வவுனியா வைரவப்புளியங்குளம் அருள்மிகு ஆதி விநாயகர் ஆலய புனராவர்த்தன நவ குண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

# 400 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கில், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 400 பேருக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த வாரம் வழங்கி வைக்கப்பட்டன.

"தோள்கொடுக்கும் தோழமைகள் - பிரித்தானியா" என்ற அமைப்பின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்ட இந்த செயற்பாடு முதற்கட்டமாக அண்மையில் வெள்ளப்பெருக்கின் போது பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த சுமார் 1200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக கடந்த வாரம் மன்னார் மாவட்டத்தின் வறுமைக்கோட்டிற்குட்பட்ட தேத்தாவடி கிராமம், கள்ளியடி பாடசாலை, பாப்பாமேட்டை கிராமம், சோதிநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 400 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (9)

# பாரதம்

# ஹோட்டலில் திடீரெனத் தீ! 20 பேர் உடல் கருகிப்பலி

## நேற்று அதிகாலை வேளையில் சம்பவம்

(டில்லி)

டில்லி கரோல்பாக் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் நேற்று அதிகாலை நடந்த தீவிபத்தில் 20 பேர் உடல்கருகிப் பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்துள்ளனர். தீவிபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.



டில்லி கரோல்பாக் பகுதியில் அர்பித் பேலஸ் என்ற ஹோட்டல் இயங்கி வருகிறது. 4 அடுக்குகளையும் 40 இற்கும் மேற்பட்ட அறைகளையும் கொண்ட இந்த ஹோட்டலில் 60 இற்கும் மேற்பட்டோர் தங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று அதிகாலை திடீரென ஹோட்டலில் தீவிபத்து ஏற்பட்டு பரவத் தொடங்கியது.

இதையடுத்து, தீயணைப்புப் படையினர், மீட்புப் படையினருக்குத் தகவல் அளிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து தீயை அணைத்து, மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இந்தத் தீவிபத்தில் 20 பேர் உடல் கருகி பலியானார்கள், 6 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து டில்லி தீயணைப்புப் படை துணைத் தலைவர் சுனில் சவுத்ரி தெரிவிக்கையில், "தீவிபத்து குறித்து எங்களுக்கு நேற்று அதிகாலை 4.30 மணிக்குத் தகவல் அளித்தார்கள். உடனடியாக இங்கு வந்து, தீயணைக்கும் பணியில் ஈடுபட்டோம். இதுவரை 40 இற்கும் மேற்பட்ட பயணிகளை மீட்டுள்ளோம். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீவிபத்து முதலில் 4 ஆவது மாடியில் ஏற்பட்டுள்ளது. அதன்பின் தீ மெல்ல மற்ற பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இந்த ஹோட்டலில் தீவிபத்து ஏற்பட்ட போது, 60 பேர் வரை இருந்துள்ளதாக ஹோட்டல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இப்போதுவரை 20 இற்கும் மேற்பட்ட தீயணைப்புப் படை வாகனங்கள் வந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

ஏறக்குறைய தீயை அணைத்து விட்டோம். தீவிபத்துக்கான காரணம் குறித்து இனி ஆய்வு செய்யப்படும்.

முதல் கட்ட விசாரணையில் மின்கசிவால் தீவிபத்து ஏற்பட்டு இருக்கலாம் எனக் கருதுகிறோம்" எனத் தெரிவித்தார். (4-7)

## ஏழைகளுக்கு ரூ.2000 நிதியுதவி

# முதல்வரின் அறிவிப்பை வரவேற்றார் ராமதாஸ்!



(சென்னை)

ஏழைகளுக்கு தலா ரூ. 2,000 நிதியுதவி வழங்கப்படும் என, முதல்வர் பழனிச்சாமி அறிவித்துள்ளமையினை பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வரவேற்றுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் 60 இலட்சம் குடும்பங்களுக்கு தலா ரூ. 2,000 நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திருக்கிறார். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன் கருதி அறிவிக்கப்பட்டுள்ள இந்த திட்டம் வரவேற்கத்தக்கதாகும்.

தமிழக சட்டப்பேரவையில் அவை விதி எண் 110 இன் கீழ் அறிவிப்பு வெளியிட்ட முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, கஜா புயலாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள 60 இலட்சம் அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒரு முறை சிறப்பு நிதியுதவியாக ரூ.2,000 வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

விவசாயத் தொழிலாளர்களில் தொடங்கி அனைத்துத் தொழிலாளர்களுக்கு இந்த உதவி வழங்கப்படும். நகர்ப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவிருக்கிறது.

தமிழக அரசின் இந்த நிதியுதவி சரியான நேரத்தில் வழங்கப்படும் மிகத் தேவையான உதவியாகும். 'கஜா' புயலால் தமிழகத்தில் 7 மாவட்டங்கள் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அந்த மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வேலை வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 150 ஆக அதிகரிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

ஆனால், அத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிய நிதி போதாததால் 'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை உறுதித் திட்டத்தின் கீழ் போதுமான நாட்களுக்கு வேலை வழங்கப்படவில்லை.

தமிழகத்தின் பல பகுதிகளில் வறட்சி நிலவுவதால் அங்கும் இதே நிலை தான் காணப்படுகிறது. வறட்சிக் காலங்களில் மக்களின் வறுமையைப் போக்குவதற்கான சிறந்த வழிகளில் ஒன்று வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை வழங்குவது தான். அதன் மூலம் அவர்களின் வறுமையை ஓரளவாவது போக்க முடியும்.

ஆனால், அந்தத் திட்டத்தின் செயற்பாடே தடுமாற்றத்தில் உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டிய நிலையில் நடப்பாண்டில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் சராசரியாக 37.48 நாட்களுக்கு மட்டும் தான் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது 2016-17 ஆம் ஆண்டில் வேலை வழங்கப்பட்ட 63.87 சராசரி நாட்களுடன் ஒப்பிடும் போது இப்போது பாதியளவு நாட்களுக்கு மட்டும் தான் வேலை வழங்கப்பட்டிருக்கிறது.

மற்றொருபுறம் சிவகாசி பகுதியில் பட்டாசு ஆலைகள் மூடப்பட்டு இன்றுடன் 103 நாட்களாகிவிட்ட நிலையில், அவர்களுக்கு மாற்று வேலைக்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. பொதுவாக இத்தகைய பாதிப்புகளின் தாக்கம் மற்ற துறைகளையும் பாதித்திருக்கிறது.

எனவே, பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு ஏதேனும் உதவி வழங்கப்பட வேண்டியது அரசின் கடமையாகும். அந்த வகையில் தமிழக அரசு இப்போது அறிவித்துள்ள ரூ.2,000 நிதியுதவி ஏழைக்குடும்பங்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# ஜனாதிபதி தேர்...

# ட்ரம்ப் சிறைக்...

## செனட் சபை உறுப்...

(வோஷிங்டன்)

ஜனாதிபதி ட்ரம்ப் தனது பதவிக் காலத்தில் முழுமையாக பணியாற்ற மாட்டார். 2020 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக அவர் சிறைக்குச் செல்வார் என செனட் சபை உறுப்பினர் எலிசபெத் வாரன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு (2020) ஜனாதிபதித் தேர்தல் நடக்கிறது. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளருக்கான களத்தில் மூத்த செனட் சபை உறுப்பினர் எலிசபெத் வாரன் உள்ளார். இதற்காக அவர் ஜனநாயக



கட்சியினரிடையே பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில்

நேற்... ணத்...

# ரஷ்யாவில் படையெடுக்...

(மொஸ்கோ)

ரஷ்யாவில் உணவைத் தேடி பனிக்கரடிகள் கூட்டம் கூட்டமாக குடியிருப்புப் பகுதிகளுக்குப் படையெடுக்கத் தொடங்கியுள்ளன.

ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் ஆர்க்டிக் பெருங்கடல் பகுதியை ஒட்டி அமைந்துள்ளது நோவாயா செம்லியா தீவுக்கூடம். இந்த தீவுக்கூடத்தின் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் பனிக்கரடிகள் வசித்து வந்தன.

தற்போது அங்கு அதிக பனி காரணமாக மீன்கள் உள்ளிட்ட சில உயிரினங்கள் இடம்பெயர்ந்து விட்ட



தால் உணவு கிடைக்காமல் பனிக்க... இதனால் உணவைத் தேடி பனிக்க... மாக குடியிருப்பு பகுதிகளுக்கு பை... உள்ளன.

ஆர்க்கான்கெலஸ்க் பிராந்தியத்...

# பொருளாதார நெருக்க... பாகிஸ்தானுக்கு ...

(இஸ்லாமாபாத்)

பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் பாகிஸ்தானுக்கு உதவ தயாராக இருப்பதாக சர்வதேச நிதியம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. சர்வதேச நிதியத்திடம் (ஐ.எம்.எப்.) பெற்ற கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய நெருக்கடியில் அந்நாடு உள்ளது.

அந்நாட்டின் அந்நியச் செலாவணியின் கையிருப்பு வெறும் 8.12 பில்லியன் டொலர் (சுமார் ரூ.57 ஆயிரத்து 650 கோடி) மட்டுமே உள்ளது.

இது ஐ.எம்.எப். மற்றும் உலக வங்கி நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச அந்நியச்செலாவணி கையிருப்பை விட குறைவான தொகை ஆகும்.

அது மட்டுமின்றி இந்த தொகை, 7 வார கால இறக்குமதிக்குத்தான் பாகிஸ்தானுக்கு போதுமானதாக உள்ளது. இதன் காரணமாக பாகிஸ்தானுக்கு கடன் வழங்க உலக வங்கியும், ஆசிய வளர்ச்சி வங்கியும் மறுத்து விட்டன.

இந்த நெருக்கடியான சூழலில் பாகிஸ்தானுக்கு சீனா 2.5 பில்லியன் டொலரும் (சுமார் ரூ.17 ஆயிரத்து 750 கோடி), சவுதி அரேபியா 6 பில்லியன் டொலரும் (சுமார் ரூ.42 ஆயிரத்து 600 கோடி) நிதி உதவியாக வழங்க முன்வந்தன. எனினும் பாகிஸ்தான் பொருளாதர நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சூழல் இன்னமும் வரவில்லை.

இந்த நிலையில், டுபாயில் நடைபெற்று வரும் சர்வதேச மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் பங்கேற்றுள்ளார். அவர் இந்த மாநாட்டுக்கு மத்தியில் ஐ.எம்.எப்.பின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டின் லகார்டேவை சந்தித்து பேசினார்.


இது குறித்து இம்ரான்கான் தனது டுவிட்டர் பக்கத்தில், "பாகிஸ்தானில்



# வெளிநாடு

## ...தேர்தலுக்கு முன் ...க்கு செல்வார்

### ...றுப்பினர் ஆவேசம்



நேற்று முன்தினம் அயோவா மாகாணத்தில் ஜனநாயகக் கட்சியினரை சந்தித்து பேசினார்.

அப்போது அவர், "ஜனாதிபதி ட்ரம்ப் தனது பதவிக் காலத்தில் முழுமையாகப் பணியாற்ற மாட்டார். 2020 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக அவர் சிறைக்குச் செல்வார். இனவெறி மற்றும் வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் தினந்தோறும் டுவிட்டரில் கருத்துகளை ட்ரம்ப் பதிவிடுகிறார். உண்மையில் அந்த கருத்துகள் மிகவும் மோசமானவை. மக்கள் அந்த டுவிட்டர் பதிவுகளை நம்பி ஏமாறக்கூடாது" எனத் தெரிவித்துள்ளார். (4-7)

## ...டுக்கும் பனிக் கரடிகள்



...மல் பனிக்கரடிகள் தவிக்கின்றன.

...தேடி பனிக்கரடிகள் கூட்டம் கூட்ட...ளுக்கு படையெடுக்கத் தொடங்கி...

...பிராந்தியத்தில் உள்ள பெல்ஷியா குபா நகரில் 50 இற்கும் மேற்பட்ட பனிக்கரடிகள் சுற்றித் திரிவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பனிக்கரடிகள் மிகவும் ஆபத்தானவை என்பதால் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. அதோடு அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் கரடிகளை விரட்டி அடிக்கவும் இராணுவவீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ...நக்கடியில் சிக்கியுள்ள ...கு உதவத் தயார்



பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுக்க கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் இருவருக்கும் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது" எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "இந்தச் சீர்திருத்தங்கள் நாட்டை நிலையான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும். பாதிப்படைந்துள்ள துறைகள் அனைத்தும் பாதுகாக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

அதேபோல் இந்த சந்திப்பு தொடர்பாக ஐ.எம்.எப். நிர்வாக இயக்குநர் கிறிஸ்டின் லகார்டே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது,

பாகிஸ்தானை பொருளாதார பின்னடைவில் இருந்து மீட்க அந்நாட்டிற்கு உதவ ஐ.எம்.எப். தயாராக உள்ளது. இதற்காக தீர்க்கமான மற்றும் வலுவான கொள்கைகளை வகுத்து கூடுதல் வளர்ச்சிக்கான அடித்தளங்கள் அமைக்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## பாலியல் குற்றச்சாட்டு பாதிரியார்கள் 152 பேர் நீக்கம்

(மெக்சிக்கோ சிற்றி)

மெக்சிக்கோவில் கடந்த 9 வருடங்களில் சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான 152 பாதிரியார்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மெக்சிக்கோவில் தேவாலயம் ஒன்றின் பேராயர் ஒருவர் தெரிவிக்கும்போது, "கடந்த ஒன்பது வருடங்களில் மட்டும் 152 கத்தோலிக்க பாதிரியார்கள் சிறார்களுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபட்டதற்காக தேவாலயத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் சிறைத் தண்டனை பெற்றுள்ளனர்" என்றார்.



பிரேசிலுக்கு அடுத்து அதிகம் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அதிகமாக இருப்பது மெக்சிக்கோவில்தான்.

முன்னதாக, சில பாதிரியார்களும் பிஷப்புகளும் பாலியல் பலாத்காரச் செயலில் ஈடுபட்டுள்ளனர் என்று போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

2018 இல், கேரள கன்னியாஸ்திரி ஒருவர் பிஷப் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியதை அடுத்து இந்தப் பிரச்சினை பெரிதானது.

இதனைத் தொடர்ந்து தேவாலயங்களில் பாலியல் குற்றச்சாட்டில் ஈடுபடும் பாதிரியார்களுக்கு எதிரான நடவடிக்கைகள் உலக அளவில் அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## அரசாங்க முடக்கத்தை தவிர்த்துக்கொள்ள அமெரிக்க எல்லைப்பாதுகாப்பு உடன்பாடு

(வோஷிங்டன்)

எல்லைப் பாதுகாப்புக் கொள்கை அடிப்படையில் அமெரிக்க அரசாங்கத்திற்கு நிதியளிப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

மற்றுமொரு அரசாங்க முடக்கத்தை தவிர்த்துக் கொள்ளும் வகையில் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சியினரிடையே நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

எனினும், அமெரிக்க-மெக்சிக்கோ எல்லையில் பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்கு நிதியளிப்பது தொடர்பான ஒப்பந்தம் குறித்த விபரங்கள் வெளியிடப்படவில்லை.

ஆனால், இதனை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆதரிப்பாரா? என்பது கேள்விக்குறியாகவுள்ளது. ஜனாதிபதி ட்ரம்ப் டெக்சாஸில் அரசியல் பிரசாரமொன்றில் ஈடுபட்டுள்ளார்.

நாட்டில் 35 நாட்களாக நீடித்துவந்த அரசாங்க துறைகளின் முடக்கம் கடந்த மாதம் 25 ஆம் திகதி தற்காலிகமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

எனினும், எதிர்வரும் 15 ஆம் திகதி வரையே அரசாங்கத்தின் செயற்பாடுகள் இடம்பெறும் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எனினும், செனட் சபையின் எல்லை பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளின் முடிவுகளில் அதிருப்தி கொண்டால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அரசாங்கம் மீண்டும் முடக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் மற்றுமொரு அரசாங்க முடக்கத்தை தவிர்க்கும் வகையில் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சியினரிடையே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## குற்றவாளியின் கழுத்தில் பாம்பைச்சுற்றி பொலிஸார் விசாரணைகள் முன்னெடுப்பு

### இந்தோனேசியாவில் கொடூரம்

இந்தோனேசியாவில் குற்றவாளியின் கழுத்தில் பாம்பினைச் சுற்றி ஆபத்தான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமை சர்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவில் தொலைபேசி திருடிய வழக்கில் பப்புவா பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்தனர். விசாரணையின் போது சந்தேக நபர் குற்றத்தினை ஒப்புக்கொள்ளவில்லை.

இதையடுத்து மிரட்டினால் ஒப்புக்கொள்வார் என நினைத்த பொலிஸார், மலைப்பாம்பு ஒன்றினை சந்தேக நபரின் கழுத்தில் போட்டு சுற்றியுள்ளனர். இதனை காணொலியாகவும் எடுத்துள்ளனர். அந்த காணொலி இணையத்தளத்தில் வெளியாகி கடும் சர்ச்சை ஏற்பட்டது.



இந்த நடவடிக்கையை பலரும் கண்டித்த நிலையில், நடந்த சம்பவத்திற்கு ஜெயவிஜயா தலைமை பொலிஸ் அதிகாரி டோனி ஆனந்த ஸ்வாதயா மன்னிப்பு கோரியுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'விசாரணை செய்தவர்கள் சரியான முறையை பின்பற்றவில்லை. அவர்கள் பயன்படுத்திய பாம்பு விஷமற்றது. குற்றவாளியின் உடலில் காயம் ஏதும் ஏற்படுத்தவில்லை.

மேலும் இந்த விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறோம்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## இளவரசியின் வேட்பு மனுவை நிராகரித்தது தேர்தல் ஆணையகம்

(ரங்கூன்)

தாய்லாந்துப் பொதுத் தேர்தலில், பிரதமர் பதவிக்குப் போட்டியிட தீர்மானித்திருந்த இளவரசி உபோல்ரத்னாயின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கட்சிகளின் சார்பில் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுபவர்களின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் தாய்லாந்து இளவரசி உபோல்ரத்னாவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. இதன் காரணமாக அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அரசியலில் ஈடுபடக்கூடாது எனவும் அரசியல் பதவிகளை வகிக்கக் கூடாது எனவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி தாய்லாந்தில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவப்புரட்சிக்குப் பின்னர் நடைபெறும் முதல் தேர்தல் இது வென்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# இந்து சமய விவகார அமைச்சு உறங்கும் அமைச்சாக இருக்காது

## துறைசார் அமைச்சர் மனோ தெரிவிப்பு

(ஏறாவூர்)

தமிழர்கள் பிற மதத்தவர்கள் போன்று இந்து மக்கள் வாழாத இடங்களில் கோயில்களை அமைத்து நாட்டையும் நிலத்தையும் பிடிப்பதில்லை என தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மற்றும் சமூக மேம்பாடு, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்தாண்டு மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்.

"கடந்த ஒக்டோபர் மாதத்தில் நாட்டில் ஒரு அரசியல் விபத்து ஏற்பட்டது. எங்களது அரசாங்கத்தை சில தரப்பினர் திருட முற்பட்டனர். அந்த கும்பலை மக்களின் பலம் மற்றும் சட்டத்தின் பலத்துடன் நாங்கள் விரட்டி அடித்துள்ளோம்.

அதனால் எமது அமைச்சு மூலம் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறான விடயங்கள் சில நன்மைகளைத் தந்துள்ளன. நாரதர் கலகம் நல்லதில் முடியும் என்பது போன்று அந்த விபத்தால் அமைச்சரவை மாற்றப்பட்டு எனக்கு அதிக பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்திற்கு பின்னர் வேறு வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. கடந்த மூன்று காலாண்டுகளுக்கு மூன்று கோடி ரூபாவும் அடுத்த காலாண்டுகளுக்காக 9 கோடி ரூபாவும் இந்து விவகாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தைப் போன்று இந்து சமய விவகார அமைச்சு என்பது ஒரு உறங்கும் அமைச்சாக இனி இருக்காது" என அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# அரச ஊடகங்களை மக்கள் சேவை ஊடகங்களாக மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

அரச ஊடகங்களை உண்மையான மக்கள் சேவை ஊடகங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்துடன், அரச ஊடகங்களின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக நிதி மற்றும் ஊடக அமைச்சர் ஏழு பேர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஐ.நா.வின் கலாசார அமைப்பான யுனெஸ்கோவின் ஆலோசகராக பணியாற்றிய விஜயானந்த ஜயவீர குழுவின் தலைவர். இதில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, கலாநிதி பிரதீப் வீரசிங்ஹ, பிரபல ஊடகவியலாளர் நாலக குணவர்த்தன், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கௌசல்யா பெர்னாண்டோ, அனோமா ராஜகருணா, சட்டத்தரணி சுதர்ஷன குணவர்த்தன ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இன்று சமூகத்தில் ஊடகப் பயன்பாடு, அவற்றின் சுதந்திரம் பற்றிய சமூக கருத்தாடல் தீவிரம் பெற்றுள்ளது. இந்தப் பின்புலத்தில் தனியார் ஊடகங்களை ஒழுங்குறுத்துவதற்கு முன்னர், அரச ஊடகங்களை உண்மையான மக்கள் சேவையாக மாற்ற வேண்டும் என்பது ஊடகத்துறை சார்ந்த நிபுணர்களின் கருத்தாகும். (இ-7)

# பிரதேச செயலக ஆலயத்தில் மீண்டும் பிள்ளையார் சிலை



(கல்முனை)

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் மீண்டும் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் இருக்கவில்லை. ஏனைய ஊழியர்கள் வெளியேறிய சமயம் பார்த்து இச்சிலை வைக்கப்பட்டுள்ளது.

கல்முனையைச் சேர்ந்த இளைஞர் அணியொன்று இப்பிள்ளையார் சிலையை வைத்துள்ளது.

அமைச்சர் மனோ கணேசனின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கிருஸ்ணபிள்ளை சாருஹாஸ் தலைமையிலான குழுவினரே இச்சிலை வைப்புக்கு பொறுப்பாக இருந்துள்ளனரெனத் தெரிய வருகின்றது.

இணைப்பாளர் கிருஸ்ணபிள்ளை சாருஹாஸிடம் இது தொடர்பாகக் கேட்டபோது.

கல்முனை தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடம். இங்கு ஆலயம் வைத்து வழிபடுவதைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை. சட்டம் யாவருக்கும் சமம்.

இது சட்டவிரோதமென்றால் இவ்விதம் கல்முனை நகரில் பல வர்த்தகக்கடைகள் சட்டவிரோதமாக உள்ளன. முதலில் அவற்றை அகற்றுங்கள். பின்னர் வணக்கஸ்தலத்தை அகற்றலாம்.

சமூக நல்லிணக்கம், இன நல்லுறவு என்பது இருசாராரிடமிருந்தும் வர வேண்டும். ஒருசாராரிடமிருந்து ஒருதலைப்பட்சமாக வரும் உறவு பலனளிக்காது.

வர்த்தக சங்கத்தினர் விடுத்த அறிக்கைக்கு மறு அறிக்கைவிடுமாறு பொதுக் கூட்டமொன்றில் த.தே.கூட்டமைப்பினரிடம் கோரப்பட்ட போது அவர்கள் சாக்குப் போக்குச்சொல்லி மெதுவாக நழுவினர். அதேபோன்று சிலை அமைப்பிற்கும் ஆள் மாறினர்.

விலாங்கு மீனாக வாழ முடியாது. எனவேதான் நான் முன்வந்து இச் சிலையை நிறுவியுள்ளேன் என்றார்.

அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இவ்வாலயத்தில் பிள்ளையார் சிலை நிறுவப்பட்டு விழாவும் நடைபெற்றது.

அதேவேளை மறுநாள் அச்சிலை அகற்றப்பட்டிருந்தது. அது மேலிடத்து உத்தரவின்பேரில் பிரதேச செயலாளராலேயே அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. 10 நாட்களாக ஆலயத்தில் சிலை இல்லாதிருந்தது.

இந்நிலையில் அந்த ஆலயத்துள் மீண்டும் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாலயம் தொடர்பாக கல்முனை நீதவான் நீதிமன்றில் முதல்வரால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (இ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அபூர்வ தற்காப்பு அமைப்பு

அமெரிக்காவிலே வடபகுதியிலே மிச்சிகன் ஏரியென்று ஒரு ஏரி!

அந்த ஏரியிலே ஜனவரி மாதத்திலே தண்ணி இருக்காது! வேறு என்ன இருக்கும் என்று கேக்கின்றீர்களா?

பனிக்கட்டிதான் இருக்கும்!

குளிர் அதிகமாக இருப்பதனால் தண்ணீர் எல்லாம் பனிக்கட்டியாக உறைஞ்சு போய் இருக்கும்.

அந்த நேரத்தில் அங்கே போய் எல்லோரும் சறுக்கு விளையாட்டு விளையாடுவது வழக்கம்.

1984 ஆம் வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அன்றைக்கு ஒரு அப்பாவும் பிள்ளையும் அங்கே போய் விளையாடிக்கொண்டிருந்தார்கள்!

அந்தப் பையன் பேர் ஜிம்மி.4 வயதுப் பையன்!

திடீரென்று என்ன ஆகிவிட்டது தெரியுமா?

அந்த ஐஸ் தரை பிளந்தவிட்டுது! அந்தப் பையன் உள்ளே போயிட்டான்!

அந்த நேரத்தில் இதை யாரும் கவனிக்கவில்லை!

பையனைக் காணவில்லை என்று தேடிக் கண்டுபிடிக்கிறதற்குள்ளே 20 நிமிடம் ஆகிவிட்டது!

கடைசியா அவனைக் கண்டுபிடித்து வெளியிலே இழுத்துப் போட்டார்கள்! பார்த்தால்!

பையன் உறைந்து போய்விட்டான்! மூச்சு வரவில்லை! இதயத்துடிப்பு நின்று போய்விட்டது! மூச்சும் இல்லை! நாடித்துடிப்பும் இல்லை!

அப்படி என்றால் என்ன அர்த்தம்!

பையன் இறந்து போய்விட்டான் என்றுதான் அர்த்தம்! இருந்தாலும் அங்கே இருந்தவர்கள் முயற்சியைக் கைவிடவில்லை! பக்கத்தில் இருந்த வைத்திய சாலைக்குத் தகவல் கொடுத்தார்கள்.

உடனே அங்கிருந்த வைத்தியர்கள் மின்னல் வேகத்தில் ஹெலிகொப்டரில் பறந்து வந்தார்கள். இரத்தக் குழாய் வழியாக மருந்து எல்லாம் செலுத்தினார்கள்.

நுரையீரலுக்குள்ளே தொடர்ந்து காற்றை பம்ப் செய்தார்கள்.

தசை எல்லாம் நாசமடையாமல் இருக்க வேண்டும்.

அதுக்காக ஹீட் லேம்களை உடம்பு மேலே பரப்பி உடம்பை சூடாக்கினார்கள். இது எல்லாம் சரி !இருந்தாலும் இதயத்தை ஓட வைக்க வேண்டும். அதுதானே முக்கியம்!

அதுக்காக அஞ்சு தடவை எலட்ரிக் ஷாக் கொடுத்துப் பார்த்தார்கள்! பிரயோசனம் இல்லை! இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது! என்ன ஆகிவிட்டது தெரியுமா?

இறந்துபோன நிலைமையிலே இருந்த அந்த பையன் லேசா மாறி கோமா என்கிற நிலைமைக்கு வந்தான்!

அதாவது மூச்சு மட்டும் லேசா ஓடிக்கொண்டிருக்கும்.

மற்றப்படி எல்லாம் இறந்தது மாதிரித்தான்!

அப்புறம் என்ன செய்தார்கள் தெரியுமா?

அந்தப் பையனைத் தூக்கிக்கொண்டு வைத்தியசாலைக்குப் போய்விட்டார்கள்!

மிக்சிக்கன்லே குழந்தைகளுக்கான மெமோரியல் வைத்தியசாலை ஒன்று இருக்கின்றது. அங்கேதான் இவனை அவசரமாக தூக்கிக் கொண்டு பறந்தார்கள்!

இது மாதிரி கேஸ்லே கோமாவில் இருந்து திடீரென்று மீண்டால் கூட ஆபத்துத் தானாம்! கோமாவிலேயே இருந்து திடீரென்று மீண்டால் மூளை வீங்கிப் போய் விடுமாம்!

இதுக்காக அந்தப் பையனுக்குப் போராட்டம் தான்!

அதுக்குப் பிறகு தான் நம்பிக்கை வந்தது! ஆமாம்! அந்தப் பையன் மெல்ல கண்ணைத் திறந்து பார்திருக்கின்றான்! எல்லோருக்கும் சந்தோசம்.

அப்புறம் ஒரு வாரம் கழித்து மெதுவாகச் சிரித்திருக்கின்றான்.

இதற்குப்பிறகு கொஞ்சம் கொஞ்சமா கை-காலை அசைத்திருக்கின்றான். நாலைந்து மாதத்தில் வீட்டுக்கு வந்துவிட்டான்.

இது ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சிதான்.

ஏனென்றால் இருபது நிமிட நேரத்திற்கு ஐஸ் தண்ணியிலே ஒரு வயது பையன் மூழ்கியிருக்கின்றது சாதாரண விடயம் இல்லை! ஒட்சிசன் இல்லாத நிலைமையிலே மூளை கெட்டுப் போய்விடும்! பிழைக்கவே முடியாது!

அப்படி இருந்தும் அந்தப் பையன் பிழைத்தது எப்படி? அந்த வைத்தியர்கள் என்ன சொல்கின்றார்கள் என்றால்.. "நவீனமான சிகிச்சை முறைகள் இதுக்கு மிகவும் உதவியா இருந்தது உண்மைதான். இருந்தாலும் அந்தப் பையன் பிழைத்ததுக்கு முக்கிய காரணம் அவன் உடம்புக்குள் இருந்த விசித்திரமான தற்காப்பு மெக்கானிசம் தான்" என்கிறார்கள்! அது என்ன தற்காப்பு மெக்கானிசம்?

இப்ப திமிங்கிலம் ஸீல் இது மாதிரி கடல் பிராணிகள் இருக்கு இல்லையா...

இது எல்லாம் அடிக்கடி ஐஸ் தண்ணீரிலே டைவ் செய்ய வேண்டியிருக்கும்!

அப்படி செய்கின்றபோது நெர்வஸ் சிஸ்டம் மூளைக்கு சிக்னல் கொடுக்கின்றது. உடனே என்ன ஆகும் என்றால் ஒட்சிசன் நிரம்பிய இரத்தம் அத்தனையும் பாதுகாப்பாக மூளைக்கும் இதயப் பகுதிக்கும் டைவர்ட் ஆகிவிடுகின்றது! அதாவது அங்கே போய் சேர்ந்து விடுகின்றது! இந்த நிலைமையிலே உடம்பு உறைஞ்சு போனால் கூட கொஞ்சம் கொஞ்சமாக இந்த ஒட்சிசனை இரத்தம் இதயத்திற்கும் மூளைக்கும் சப்ளை செய்து அது எல்லாம் கெட்டுப் போகாமல் காப்பாற்றப்படும்!

திமிங்கிலத்திற்கு இருக்கிற இந்த ஷ்பெஷல் மெக்கானிசம் இலட்சக்கணக்கான மனிதர்களிலே ஒருத்தர் இரண்டு பேருக்கு அதிசயமாக இருக்கின்றது!

அதிர்ஷ்டவசமாக இந்தப் பையனும் அது மாதிரியான ஆட்களில் ஒருத்தனா இருந்துவிட்டான்! அதனால் பிழைத்துக் கொண்டான்.

இது என்ன பெரிது? அந்தாட்டிக்கா ஆராய்ச்சியிலே வெட்டல் என்னும் கடலுக்கு தென்புறத்தில் சில வகை மீன், நண்டு இது எல்லாம் பனி நீரிலேயே பக்குவமா வாழ்ந்து கொண்டிருக்கின்றதாம்! உயிரியல் வல்லுநர்களே ஆச்சரியப்படுகிறார்கள். இதோட மெக்கானிசமெல்லாம் எப்படி என்று தெரிந்து கொண்டால் அது நமக்கு பலவிதத்தில் உதவியாக இருக்கும்!

## ராஜபக்ஷக்களில் ஒருவரே அடுத்த ஜனாதிபதி

### பவித்ரா வன்னியாராச்சி கூறுகிறார்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களில் ஒருவர் வெற்றி பெறுவாரென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன மகளிர் முன்னணியின் தொகுதி செயற்குழு கூட்டம் திஸ்ஸமஹாராமவில் நேற்று இடம்பெற்றது. இதற்கு முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.

இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே, நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்.

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் யார் வேட்பாளராக களமிறங்கினாலும் அவர்கள் தோல்வியடைவது உறுதி" எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சுங்கப் பிரிவினரால் ஒருவர் கைது



டுபாயிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்ததாக சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார். இவர்களிடமிருந்து 148 பெட்டிகளில் 29,600 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அவற்றின் பெறுமதி 16,28,000 ரூபா எனவும் சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பான விசாரணைகளையும் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## நீரில் மூழ்கி 2 வயதுக் குழந்தை பலி!

(கொழும்பு)

அரலகங்வில பகுதியில் நீரில்மூழ்கி குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரலகங்வில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்தென பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் குழந்தையொன்று கால்வாய் நீரில்மூழ்கி, கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைக்காக அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உள்பத்வெள ரூஹுனு கம பகுதியைச்சேர்ந்த 2 வயது 3 மாதமேயான குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பாதாள உலகக்குழு தலைவர்களின் பின்னணியில் அரசியல்வாதிகள்

### கம்மன்பில குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னாலும் ஒரு பெண் காணப்படுவது போல, அனைத்து பாதாள உலகக்குழு தலைவர்களது பின்னணியிலும் ஒரு அரசியல் வாதி செயற்படுவதாக பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கட்சியின் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்,

"அரசியல் வாதிகளின் ஆதரவும், பொலிஸாரின் பாதுகாப்பும் இன்றி உலகில் எந்தவொரு நாட்டிலும் பாதாள உலகக் குழுவொன்று நிலைத்திருக்க முடியாது.

எனவே ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னாலும் பெண்கள் காணப்படுவது போல, அனைத்து பாதாள உலகக்குழு தலைவரது பின்னணியிலும் ஒரு அரசியல்வாதி செயற்படுவார்.

எனவே, பாதாள உலகக் குழுவினருக்கு உதவி புரிந்த, ஆதரவளித்தவர்கள் காணப்படின் அவர்கள் கட்சி, அந்தஸ்து பாராது தண்டிக்கப்பட வேண்டும்.

எம்மிடம் அது தொடர்பான தகவல்களை இல்லை. அரசாங்கத்திடமே இவர்கள் தொடர்பான தகவல்கள்காணப்படுகின்றன.

எனவே, அவ்வாறானவர்கள் காணப்படின் உடனடியாக அவர்களுக்கு எதிராக நாட்டின் நீதியை பிரயோகியுங்கள்" என மேலும் தெரிவித்தார். (7)

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும்

### ஒஸ்ரின் கோரிக்கை



(கொழும்பு)

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கைக்கு திரும்ப வேண்டும் என்பதே தமது அரசாங்கத்தின் விருப்பமாகும் என்று இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


தமிழ் அகதிகள் தொடர்பில் ஆராய்வதற்காக சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தமது பிரஜைகள் திரும்பவும் வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கைக்கு திரும்பும் அகதிகளுக்கு சிறந்த வாழ்க்கையை அமைத்து தரவுள்ளதாகவும் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# கண்ணீர் அஞ்சலி



## ஐயம்பிள்ளை இராமநாதன்

(விநாயகபுரம், முழங்காவில், பூநகரி.)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1947 - 12 - 23 | 2019 - 02 - 11 |



கிளி.விவேகானந்த வித்தியாலய அதிபர் திருமதி ஜெயலட்சுமி மாணிக்க வாசகர் அவர்களின் அன்புத் தந்தையார் ஐயம்பிள்ளை இராமநாதன் அவர்களின் மறைவினால் துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பாள் குளம்,
கிளிநொச்சி

(C-5475)

ஆசிரியர் ஒன்றியம்,
பாடசாலை சமூகம்,
கிளி/விவேகானந்தா வித்தியாலயம்.

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

02

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தில் 40 ஆண்டுகளுக்கும் குறைவான காலமே ஆட்சி செலுத்தினர். இதனால் யாழ்ப்பாண நகரம் பெருமளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கக் கூடிய சாத்தியங்கள் இல்லை. எனினும் இன்று யாழ்ப்பாண நகரத்துள் பெரியளவில் மக்களால் பின்பற்றப்படும் கத்தோலிக்க சமயமும், நிர்வாகம் தொடர்பான சில இடப் பெயர்வுகளும் போர்த்துக்கீசர் தொடர்பை இன்றும் எடுத்துக்காட்டுகின்றன. 1658 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண நகரம் ஒல் லாந்தரிடம் வீழ்ச்சியடைந்தது.

**பராங்கியர் அல்லது பறங்கியர் (Burghers) எனப்படுவோர் யார்?**

**பறங்கியர் (Burghers) எனப்படுவோர் யார், அவர்கள் பேசும் மொழி என்ன?**

பறங்கியர் என்று பொதுவாக நாம் போர்த்துக்கீசரை



பறங்கியரின் பைலா நடனம்

குறிப்பதுண்டு. ஆனால் பராங்கியர் அல்லது பறங்கியர் (Burghers) எனப்படுவோர் 16-19ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஐரோப்பிய நாடுகளான போர்த்துக்கல், ஒல்லாந்து, ஜேர்மனி மற்றும் பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின்போது, அந்நாடுகளின் ஆண்கள் உள்ளூர் பெண்களை திருமணம்செய்து அதன் மூலம் உருவான ஐரோப்பிய-ஆசிய இனக்குழுக்கள் ஆவர்.

இவர்களில் அதிகம் பேர் இலங்கையில் காணப்படுகின்றனர். இவர்களின் மொழி போர்த்துக்கீசு, டச்சு, ஆங்கிலம் மற்றும் இலங்கை-போர்த்துக்கீச கிரியோல் மொழி (Sri Lankan Portuguese Creole-SLPC) ஆக இருந்த போதும், இவர்கள் உள்ளூர்மொழிகளையும் அதிகம் பேசுகின்றனர். போர்த்துக்கேய மற்றும் இலங்கைத் தொடர்புகள் புதிய மொழியாகிய கிரியோல் மொழியை உருவாக வழியேற்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பறங்கியர் குடும்பங்களில் குறிப்பிடப்பட வேண்டிய குடும்பங்கள் De Kretsers, Werkmeisters, Leembruggem போன்றோரின் குடும்பங்களாகும். யாழ்ப்பாணத்தில் இப்போது பறங்கியர்களைக் காண்பது அரிது. கொழும்புக்கு ரயில் பாதை ஸ்தாபிக்கப்பட்ட பின் யாழ்ப்பாணத்துப் பறங்கியர்கள் கொழும்புக்கு இடம்பெயர்ந்தனர். பல தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த பல் இனத்தவர்களிடையே மதிப் பும் மரியாதையும் பெற்று உயர் பதவிகளை வகித்த இவர்கள் சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். 1881இல் இலங்கையின் சனத்தொகையில் 0.65% ஆக இருந்த பறங்கியரின் வீதம் 2011இல் 0.19% ஆகும். தற்போது இலங்கையில் 40000 பேர் வரையில் வாழ்கிறார்கள். பறங்கியர் அதிகளவில் கொழும்பு, கம்பஹா ஆகிய நகரங்களில் காணப்படுகின்றனர்.

குறிப்பிடத்தக்க அளவானோர் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் காணப்படுகின்றனர். இலங்கையில் சிறுபான்மையினரிலும் சிறுபான்மையினராக இருக்கும் பறங்கியர்களின் அபிலாஷைகள், தேவைகள், அடையாளங்கள் ஆகியவை உரிய முறையில் கவனத்தில் எடுக்கப்பட்டு புதிய அரசியல் சாசனத்தில் உள்வாங்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண பறங்கியர் கேட்கின்றனர். பைலா நடனம், கிரியோல் மொழி போன்றவை தமது தனித்துவ அடையாளங்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் போன்று பறங்கியரும் தேசிய இனங்களில் ஒன்றாக கருதப்படுவதாகவும் பறங்கிய இனத்தவருக்கு தனித்துவமான உடை மற்றும் கலாசாரங்கள் உள்ளன என்றும் இந்த விடயங்கள் தொடர்பில் பல இடங்களில் தாங்கள் நெருக்கடிகளை சந்திப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். உலகளவில் பறங்கியரின் மொத்தச் சனத்தொகை 65,000 பேர். இந்த இனத்தில் இருந்து வந்தவர்களில் ஒருவரே இலங்கை கிரிக்கெட் அணியில் உள்ள அஞ்சலோ மத்தியூஸ் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பிரசித்தி பெற்ற பறங்கியர் சிலர்**

**Dr. R.L. Brohier**

இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த Dr. R.L. Brohier என்ற பறங்கிக்காரரின்



மூதாதையர்கள் யாழ்ப்பாண வாசிகள் என்று கூறப்படுகிறது. இவரே நில அளவையாளர்களில் முதலாவது இலங்கையராவர்.

கொழும்புப் பறங்கியரில் மிகவும் பிரசித்தி பெற்றவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற பீற்றர்கெனமன் ஆவார். இவர் 1947 தொடக்கம் 1977 வரை பாராளுமன்ற உறுப்

பீற்றர்கெனமன்



பினராகவிருந்தார்.

சார்லஸ் அம்ப்ரோஸ் லாரன்ஸ்(Charles Ambrose Lorensz) (1829-1871) ஒரு பறங்கியர். இவர் சட்டவாக்கச் சபையில் 1856-1864 வரை பதவிநிலை



பெறா உறுப்பினராக இருந்தார். இலங்கையில் முதலாவது உள்ளூர் செய்தித்தாளான Ceylon Examiner I ஆரம்பித்தவர். அவர் அப் பத்திரிகையின் நிறுவனர் மற்றும் ஆசிரியர் ஆவார். மாவட்ட நீதிபதியாகவும் இருந்தார்.

கொழும்பு மாநகர சபையை ஆரம்பிப்பதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்த இவர் 1860-1870 வரை மாநகர சபை உறுப்பினராக இருந்தது குறிப்பிடத்தக்கது. சார்லஸ் அம்ப்ரோஸ் லாரன்ஸ் இலங்கையில் பிரிட்டிஷ் நாணயப் பழக்கத்திலிருந்து நாணயத்தை ரூபாய்க்கு மாற்றுவதில் பெரும் பங்காற்றியவர். கல்வி, சீர்திருத்தம், சட்டம் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றின் சீர்திருத்தத்திலும் மேம்பாட்டிலும் முக்கிய பங்கு வகித்தார். சட்டத்துறையில் பிரசித்தமாக திகழ்ந்த இவரைச் சட்டத்துறையில் உதய தாரகை என அழைத்தனர். சிலோன் அரசு ரயில்வே ஆரம்பிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

**மந்திரிமனை- யாழ்ப்பாண அரசின் ஓர் நினைவுச்சின்னம்**

மந்திரிமனை நினைவுச் சின்னம் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் நல்லூர் சட்டநாதர் கோவிலின் தென்னெல்லையில் நல்லூர் இராசதானியின் பாரம்பரிய வரலாற்றை நினைவுபடுத்தும் வகையில் கம்பீரமான முகப்புத் தோற்றத்துடன் காணப்படுகின்றது. இம் மந்திரிமனை போர்த்துக்கீசரிடம் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைவதற்கு முன்னர் அக்கால அமைச்சர் ஒருவரின் இருப்பிடமாக இருந்ததென்பது பொதுவான கருத்தாகும்.

இம் மந்திரிமனை 13ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நல்லூரைத் தலைநகராக் கொண்டு ஆட்சி செய்த தமிழ் மன்னர்களால் கட்டப்பட்டதென்று கருதப்படுகின்றது. ஆயினும் தற்போதைய இம் மந்திரிமனையின் அமைப்பும், கலைமரபும் யாழ்ப்பாண அரசு காலத்திற்குரியவை எனக் கூறமுடியாது. சில சுதேச கலை மரபுகளும் தமிழரின் தொழில் நுட்பமும் கலந்து காணப்பட்டாலும் கட்டடத்தின் தோற்றமும் அதன் கலைமரபும் யாழ்ப்பாண அரசிற்குப் பின்னர் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியருக்கும் உரிமையாகக் காணப்படுகின்றன.



மந்திரிமனை நினைவுச்சின்னம்

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

169


சைவதூஷண பரிகாரம்

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

செய்தது

ஆனால் கிறிஸ்தவர்களோ இதை வெறும் பொய்யெனக் கண்டனம்செய்து மக்கள் அதனைப் பின்பற்றக் கூடாதெனக் கூறினர். நாவலர் அவர்களது கூற்றை இழிவுபடுத்துவதாகக் கருதி முருகனின் உண்மையான தத்துவக் கருத்தாக்கத்தை விளக்கிச் சுப்பிரபேதம் எனும் ஆக்கத்தை வெளியிட்டார்.

நாவலர் 1854 இல் சைவப் பிரகாச சமாஜியர் என்ற பெயரில் வெளியிட்ட சைவ தூஷணப் பரிகாரம் மிஷனரி மாருக்கு எதிரான மிகச் சிறந்த ஆயுதமாக விளங்கியது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் இது இரண்டு தடவை மீள் பதிப்புச் செய்யப்பட்டு மிகவும் பரந்த அளவிலான தமிழர்களால் பயன்படுத்தப்பட்டது.

வேதாகமத்தில் காணப்படும் சடங்காசாரங்களைச் சைவ ஆகமங்கள் விதிக்கும் சடங்காசாரங்களுடன் ஒப்பிட்டு நாவலர் ஆராய்ந்த விடயங்களையே இது பெரும் பாகமாகக் கொண்டிருந்தது.

ஆனால் மக்களை மதம் மாற்றுவதற்கான தங்களது முயற்சிகளில் கிறிஸ்தவ மிஷனரிமார் கடைப்பிடித்த வழிமுறைகளையிட்டு நாவலர் அதிகமாகச் சினமுற்றார். இந்த வெளியீட்டில் அவர்களது உபாயங்களை அவர் ஆக்ரோஷமாகத் தாக்குகின்றார்.

அந்தப் புன்மதத்தை இங்குள்ளவர்கள் அங்கீகரியாமை கண்டு சீவியத்திற்கு பெரும்பாலும் தேவையான இங்கிலிசுப் பாஷையை சூழ்ச்சியாக மேற்கொண்டும் பொருள் கொடுத்தும் சமய புத்தியில்லாத ஏழைகளை தம்வசப்படுத்துகின்றார்கள்.

மேலும் பணச் செருக்கினாலும் மதிமயக்கத்தினாலும் சற்றும் கூசாமல் சிவன் கடவுள் இல்லையென்றும் சைவ சமயம் துன்மார்க்கம் என்றும் சைவர்கள் அஞ்ஞானிகள் என்றும் பிசாசின் அடிமைகள் என்றும் பெரும் தூஷணங்களைப் போதித்து அச்சிற் பதிப்பித்துப் பரப்பி சைவசமயத்தின் பெருமை விளங்காத பேதைகளை மயக்கிக் கெடுக்கிறார்கள்.

இதற்குப் பதிலாக தமிழ் புரட்டஸ்தாந்தவரான கரோல் விஸ்வநாதபிள்ளை நாவலரின் வெளியீட்டுக்குப் பதிலாக

> “நாவலர் 1854 இல் சைவப்பிரகாச சமாஜியர் என்ற பெயரில் வெளியிட்ட சைவ தூஷணப் பரிகாரம் மிஷனரி மாருக்கு எதிரான மிகச் சிறந்த ஆயுதமாக விளங்கியது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் இது இரண்டு தடவை மீள் பதிப்புச் செய்யப்பட்டு மிகவும் பரந்த அளவிலான தமிழர்களால் பயன்படுத்தப்பட்டது.வேதாகமத்தில் காணப்படும் சடங்காசாரங்களைச் சைவ ஆகமங்கள் விதிக்கும் சடங்காசாரங்களுடன் ஒப்பிட்டு நாவலர் ஆராய்ந்த விடயங்களையே இது பெரும் பாகமாகக் கொண்டிருந்தது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

சுப்பிரதீபம் எனும் தலைப்பைக் கொண்ட பதிலை எழுதினார். இந்த மறுப்பு பிறரை நம்ப வைத்திருக்கக்கூடும்.

ஆனால் காலப்போக்கில் அது தன்னை ஆக்கியவரையே நம்ப வைக்க முடியவில்லை என்பது ஆக்கியோனே பின்னர் சைவத்தைத் தழுவியதனால் புலனாகின்றது.

நாவலர் கிறிஸ்தவ எதிர்ப்பையும் வைசமயக் கோட்பாட்டினையுமிட்டுக் கொண்டிருந்த வைரித்த கொள்கையைப் பின்வரும் அவரது கூற்று விளக்குகின்றது.

சிவனைத் தூஷிக்கும் மிஷனரிமாரை எதிர்ப்பதும் தூய்மையற்ற கிறிஸ்தவக் கோட்பாட்டை மறுப்பதும் மெய்மதமாகிய சைவத்தை நிலை நிறுத்தப் பாடுபடுவதும் எமது கடனாகும்.

நாவலர் தொடர்ந்து மறுப்புகள், சிறுபிரசுரங்கள் ஆகியவற்றை வெளியிட்டு கிறிஸ்தவத்தைத் தாக்கி அதன்வழி மதமாற்ற நடவடிக்கைகளையும் சைவசமயத்துக்கு எதிராக கண்டனத்தையும் நிறுத்த முயன்றார்.

தமிழ் மக்களை மீண்டும் சைவ ஆகமங்களைக் கடைப்பிடிக்கச் செய்வதற்காகவும் சைவ சமயத்தின் போதனைகளுக்கு இணங்க அவர்களைக் கட்டுப்பாட்டுடன் வாழும்படி வேண்டும் முயற்சிகளிலும் அவர் தொடர்ந்து ஈடுபட்டார்.தனியொருவர் சீர்திருத்துவதற்கு ஏழு படிகளைக் கொண்டதொரு மார்க்கத்தை நாவலர் முன்வைத்தார்.

முதலாவதாக அவர்கள் இந்தச் சத்திய விரதத்துக்குத் தடையான யாவற்றையும் அகற்றும்படி ஒவ்வொரு நாளும் சிவனைப் பக்தியுடன் பிரார்த்திக்க வேண்டும்.

இரண்டாவதாக இந்த முயற்சியில் ஈடுபடுவதனால் ஏற்படும் செலவுக்கு அவர்கள் பரஸ்பரம் தாராளமாக உதவவேண்டும்.

மூன்றாவதாக அவர்கள் தான் வெளியிடும் நூல்களைப் பணங்கொடுத்து வாங்கி அவற்றை மீண்டும் மீண்டும் கவனமாகப் படிக்க வேண்டும்.

நான்காவதாக அவர்கள் தாம் படித்தவற்றைப் பிறருக்குத் தெளிவாக விளக்கி அதன்வழி அவர்களைக் கிறிஸ்தவம் எனும் குழியில் வீழாது பாதுகாக்க வேண்டும்.

ஐந்தாவதாக எப்போதெல்லாம் மிஷனரிமாரும் அவர்களுடைய உபதேசிகளும் சிவனை தூற்றிக் கிறிஸ்தவக் கோட்பாட்டைப் பிரசங்கிக்கின்றனரோ அப்போது அவர்களைத் திருப்திப்படுத்த எண்ணாது அவர்களுக்கு எதிராக நின்று சிவன்மேல் குவிக்கும் தூற்றலை மறுத்து அவர்களின் வாய்களை மூடச் செய்ய வேண் டும்.

ஆறாவதாக அவர்களது பிள்ளைகளைப் பிறசமயத்தினரின் பிள்ளைகளுடன் சேர விடாது அவர்களுக்கு உரிய வயதில் முறையாக தீட்சை பெற வைத்து, சைவநெறியை அவர்களுக்கு கற்பித்தல் வேண்டும்.

ஏழாவதாக சிறந்த அறிவுடன் குரு,லிங்க, சாதுக்கள் சங்கமம் என்பவற்றுக்கான பக்தியுடையவர்களைச் சைவசமய பிரசாரகர்களாகத் தெரிவு செய்து, கோவில்களிலும், ஆசிரமங்களிலும், கிராமங்களின் ஏனைய இடங்களிலும் வாராந்தப் போதனைகளை மேற்கொள்ளும்படி கேட்க வேண்டும்.

இந்த வகையில், தமிழ்ப் பிரதேசமெங்கும் சைவ ஒளி யைப் பிரகாசிக்கச் செய்து ஏனைய மதங்களின் இருளை அகற்றி, வெகுசனங்களை இரட்சிக்க வேண்டும் என அவர் இறுதியில் கூறினார்.

(தொடரும்)

# மதூஷ் குறித்த பொலிஸ் விசாரணைகள் நிறைவு

(டுபாய்)

டுபாயில் ஆறு நட்சத்திர ஹோட்டலில் வைத்து கைது செய்யப்பட்டு டுபாய் தலைமை பொலிஸ் நிலையக் கட்டுப்பாட்டில் உள்ள அல் ரபா பொலிஸ் கூண்டில் அடைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரரும் பாதாள உலகக் கோஷ்டியின் தலைவருமான மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் ஐக்கிய அரபு அமீரக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில் சந்தேக நபர்களுக்கு எதிராக டுபாய் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் டுபாய் மற்றும் அபுதாபியில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் நேரடியாக அமீரக அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், சந்தேக நபர்களை டுபாய் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான திகதி தொடர்பில் எந்தத் தகவலும் வெளிப்படுத்தப்படவில்லை.

இதனிடையே மாகந்துரே மதூஷ்டன், பிரபல பாடகரான அமல் பெரேரா, அவருடைய மகனான நந்திமால் பெரேரா மற்றும் நடிகர் ரயன் வெண்ங்ரோயன் உள்ளிட்ட சந்தேக நபர்கள் கடந்த 5 ஆம் திகதி டுபாய் ஹோட்டலில் . பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பிரபல பாடகரான அமல் பெரேரா மற்றும் அவருடைய மகனான நந்திமால் பெரேரா டுபாயில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முன்னர் அவர்களை விடுவித்துக் கொள்வது தொடர்பில் பொலிஸாரிடம் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன உள்ளிட்ட குழுவினர் டுபாய்க்கு சென்றுள்ளனர்.

இந்த சட்டத்தரணிகள் குழு டுபாய் தலைமையக பொலிஸ் நிலையத்தின் சட்ட அதிகாரி மொஹமட் அல் நக்பியை சந்தித்து அவ்விருவரையும் விடுவிக்க ஏதுவான காரணிகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர்.

கைதானதாக கூறப்படும் 31 சந்தேக நபர்கள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக கூறப்படும் நிலையில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுக்கு எதிராக முன்வைக்க முடியுமான குற்றச்சாட்டுக்கள், அது சார்ந்த சட்டப் பிரிவுகள் தொடர்பில் டுபாய் பொலிஸார் ஆராய்ந்து வருவதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

# மொழியுரிமை மீறல் தொடர்பாக குறைவான முறைப்பாடுகளே பதிவு

## அரச கரும மொழிகள் ஆணைக்குழுத் தலைவர் தகவல்

(கொழும்பு)

மொழியுரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பாக மலையகத்திலிருந்து குறைவான அளவு முறைப்பாடுகளே கிடைப்பதாக அரசகரும மொழிகள் ஆணைக் குழுவின் தலைவர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

மொழியுரிமை மீறப்பட்டுள்ளமை குறித்து அரச கரும மொழிகள் ஆணைக் குழுவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் மொழியுரிமை மீறப்பட்டமை குறித்து தமது ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களை மட்டுமன்றி தனியார் நிறுவனங்களிலும் மொழியுரி மையைப் பாதுகாப்பதற்கான அரசகரும மொழிகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எமது பணிகள் சிறப்பாக இடம்பெறுவதற்கும், அவை வெற்றி பெறுவதற்கும் மக்களின் ஒத்துழைப்பு அவசியமானதாகும் என ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தாதியின் மரணம் தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும்

## ஹற்றனில் போராட்டம்





(ஹற்றன்)

ஹற்றன் நகரில் இயங்கி வரும் தனியார் வைத்திய சாலை ஒன்றில் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படும் தலவாக்கலை வட்டகொடை ஒக்ஸ்போட் பிரதேச தாதியின் மரணம் தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும் எனக்கோரி ஹற்றன் சிவில் அமைப்புக்கள் ஒன்று கூடி ஹற்றன் நீதிமன்ற நீதவானின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில் கவனயீர்ப்பு நடவடிக்கையில் நேற்றுக் காலை ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 28 ஆம் திகதியன்று ஹற்றன் டன்பார் வீதியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டு தன் உயிரை மாய்த்து கொண்ட தாதி தனது மரணத்திற்கு வைத்தியசாலையின் உரிமையாளர் மற்றும் அவரின் மனைவியே காரணம் என தனது பெற்றோருக்கு வட்சப் மூலம் தகவல் தெரிவித்துள்ளார். இந்த தகவல் வலைத்தளங்களில் பரவலாக பேசப் பட்டது.

ஆனால் குறித்த தாதியின் மரணம் தொடர்பில் ஆதாரங்கள் காணப்பட்டும் இதுவரை எவரையும் கைது செய்யவில்லை.

அதேவேளை ஹற்றன் டிக்கோயா கிளாங்கன் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணை முறையாக முன்னெடுக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த தாதியின் மரணம் தொடர்பில் ஹற்றன் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விசாரணை நீதியாக இடம்பெற்று குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் எனவும் குறித்த தாதியின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க வேண்டும் என நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் நீதிமன்றத்திற்கு செல்லும் வழியில் இந்த கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக இதில் கலந்து கொண்ட சிவில் அமைப்புக்கள் தெரிவித்தன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1642

### சித்தார்த்

நமக்கு நாமே ஆறுதல்கூறும் மன தைரியம் இருந்தால் அனைத்தையும் கடந்த போகலாம்




### மலர்

உன்னை வேண்டாமென்று விலகிப் போகிறவரிடம் மீண்டும் போய் அன்பு காட்டுவதும் ஓட்டைவாளியில் தண்ணீரை நிரப்ப முயற்சி செய்வதும் ஒன்றுதான்



### கமலி

உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை



### முருகன்

பொறாமை, கோபம், பேராசை இல்லாத வாழ்க்கைப் பாதையில் நீ பயணித்துப் பார் நீ வாழும் வாழ்க்கைக்கு அழகான அர்த்தம் புரியும்



### வித்தியா

வண்ணங்கள் நிறைந்த வாழ்க்கை கூட வேண்டாம் வலிகள் இல்லாத வாழ்க்கையைக் கொடு என் இறைவா எனக்கு அது போதும்



### லிங்கேஸ்

வீட்டை விட்டு வெளியே கிளம்பும்போது நானும் வரேன்னு அடம்பிடிக்கும் குழந்தையை சமாளிக்கத் தெரிந்தவன் வாழ்க்கையில் எதை வேணும்னாலும் சமாளிக்கலாம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் வடக்கு-கிழக்கு இடையே பாகுபாடு

## யோகேஸ்வரன் சுட்டிக்காட்டு



(கல்குடா)

வடக்கு மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு கட்டம் கட்டமாக நிரந்தர நியமனம் வழங்கப்படும்போது கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுவதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட சிங்கபாரதேப்பு சரஸ்வதி வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "வடமாகாணத்தில் இரண்டு தடவை தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொண்டர் ஆசிரியர் விடயத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒரு சட்டம், கிழக்கு மாகாணத்திற்கு மற்றுமொரு சட்டம் இருக்க முடியாது.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் செய்த குறைபாடு காரணமாக கல்குடா மற்றும் மட்டக்களப்பு மேற்கு ஆசிரியர் பற்றாக் குறையை எதிர்நேக்குகின்றது. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மாகாண கல்வி பணிப்பாளர், ஆளுநர் மற்றும் மத்திய கல்வி அமைச்சரோடு பேச இருக்கிறோம். ஆசிரியர் பற்றாக்குறை யோடு தொடர்ந்தும் பாடசாலைகள் இயங்க முடியாது" என மேலும் தெரிவித்தார். (7)

# பெருந்தோட்ட கம்பனிகள் சபைக்கு செலுத்தும் வரிகள் அதிகரிக்கப்படும்

## கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

(கொட்டகலை)

பெருந்தோட்டக் கம்பனிகள் பிரதேச சபைகளுக்கு செலுத்தும் வரி மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதால் தற்போதைய சூழ்நிலைக்கேற்ப அதை மாற்றியமைக்க வேண்டியுள்ளதென கொட்டகலை பிரதேச சபை தலைவர் இராஜமணி பிரசாத் சபையின் மாதாந்த அமர்வில் தலைமையேற்று பேசும்போது தெரிவித்துள்ளார்.

சில பெருந்தோட்டக் கம்பனிகள் தேயிலை செடிகளை தொழிலாளர்களுக்கு பராமரிப்பதற்காக உப குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளன.

இவ்வாறு தொழி லாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேயிலை செடிகளின் பரப்பிற்கு கம்பனிகளால் வசூலிக்கப்படும் வரி கம்பனிகளால் பிரதேச சபை களுக்கு செலுத்தும் வரியை விட இரண்டு மடங்காக காணப்படுகின்றது.

இந்த விடயத்தையும், நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது பெருந்தோட்ட நிறுவனாங்கள் பிரதேச சபைகளுக்கு செலுத்தும் ஏக்கர் வரி, தொழிற்சாலை வரி, கட்டடங்கள் அமைத்தலுக்கான அனுமதி மற்றும் அதற்கு செலுத்த வேண்டிய வரி போன்றவை குறைந்த மட்டத்தில் காணப்படுவதோடு, அவை முறையான உள்ளூராட்சி மன்ற சட்ட திட்டங்களுக்கு அமைய பேணப்படாமலிப்பது தெரிய வந்துள்ளது.

அதனால் தோட்டங்கள் பிரதேச சபைகளுக்கு செலுத்த வேண்டிய வரிகள் தொடர்பான விடயாங்களை மறுபரிசீலனை செய்து முறையான வரி வசூலிப்பு முறையை அறிமுகப்படுத் தவுள்ளோம் என தெரிவித் துள்ளார்.

அத்தோடு, பெருந்தோட்ட மக்களின் பல அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு பிரதேச சபையின் நிதியும், மக்கள் பிரதிநிதிகளினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியும் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

எதிர்காலத்தில் தோட்ட கம்பனிகள் மூலம் அறவிடப்படும் நிதியையும் தோட்டங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படை தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் எனவும் கொட்டகலை பிரதேச சபை தலைவர் இராஜமணி பிரசாத் இதன்போது மேலும் அவர் தெரிவித்தார்.(4-7)

# யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் தமிழ் மொழிமூல கற்கைநெறிகள்

(யாழ்ப்பாணம்)

டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலும் உரிய துறையில் NVQ தரச் சான்றிதழ் தகைமையுடையவர்கள் (மட்டம் 3 அல்லது மட்டம் 4) அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம்,விஞ்ஞானம் மற்றும் தமிழ் அடங்கலாக 6 பாடங்களை உடைய மாணவர்களுக்காக தமிழ் மொழி மூலமான பின்வரும் பகுதி நேர (சனி,ஞாயிறு) (NVQ Level5) தர கற்கை நெறிகள் எதிர்வரும் 16.02.2019 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தகைமை உடைய மாணவர்கள் அன்றைய தினமோ அல்லது அதற்கு முன்னரோ இணைந்து கொள்ள முடியும். மேலதிக விபரங்களை தொழில் நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம (தொலைபேசி இலக்கம்- 021 221 2403)

1. தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ்-ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் National Certificate in Technology-ME (Auto Mobile)-NVQ Level 5

2. தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ்-கணிய அளவையியல் National Certicate in Technology - Quantity surveying) QS NVQ Level 5

அத்துடன் வெல்டிங் (Welding), இலத்திரனியல் (Electronic) போன்ற சான்றிதழ்தர (NVQ Level 4) கற்கை நெறிகளிலும் குறிப்பிட்டளவான மாணவர்கள் இணைந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது என பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 100 | 75 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 140 | 150 | 200 |
| தக்காளி | 80 | 70 | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 80 | 40 | 50 |
| கோவா | 50 | 50 | 60 | 50 | 60 |
| கரட் | 100 | 100 | 100 | 70 | 160 |
| பூசணி | 40 | 30 | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 30 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 75 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 30 | 50 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30 | 40 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 50 | 60 | 60 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | – | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 50 | 80 | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 100 | 150 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 50 | 40 | 60 | 60 | 80 |
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 50 | 110 | 80 |

# செய்தித்துளிகள்

## மீன்பிடித்த நால்வர் கைது

(புத்தளம்)

அனுமதிப்பத்திரமின்றி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட மீனவர்கள் நால்வரை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

புத்தளம்-கதிரைமலை கடற்பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின் போதே, குறித்த நால்வரையும் கைது செய்துள்ளனர்.

மேலும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக உடன் வைத்திருந்த மீன்பிடி படகொன்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் சிலவும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது. (இ-7)

## துப்பாக்கிகளுடன் மூவர் கைது



(கொழும்பு)

மகியங்கனை ரிதிமாலியத்த அக்கிரியாங்கும்புற பிரதேசத்தில் பயிர்ச்செய்கை நிலமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாக ரிதிமாலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அக்கிரியாங்கும்புற பிரதேசத்தை சேர்ந்த 28,29,30 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ரிதிமாலியத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஆளுநரின் பொதுமக்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் பொதுமக்கள் தினம் கடந்த வாரம்போலவே இன்றும் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் ஆளுநரின் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலை செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வு இன்று பிற்பகல் 1.30மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.நரேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்வார் .(இ-7)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை


தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் 14 ,15 ஆம் திகதிகளில் டெங்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளது. இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு பரவலிலிருந்தும் நோய்த் தாக்கத்திலிருந்தும் விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனாங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ)




# எல்லோருமே கெட்டவர்கள் தான்



முன்னொரு காலத்தில் அங்கிரசர் என்றொரு ரிஷி வனத்தில் வசித்து வந்தார். அவர் மிகவும் புகழ் பெற்றவர். அவரிடம் மாணாக்கர்கள் பலர் இருந்தனர். அவருடைய ஞானத்தில் இருந்து கணிசமான அனுகூலத்தை அவர்கள் பெற்றிருந்தனர் எனலாம்.

அந்த மாணவர்களில் சிலர், பக்தியும் கடமையுணர்வும் கொண்டவர்கள். மற்றவர்களைவிட எளிதில் எதையும் கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்களுடைய நற்பண்புகள் காரணமாக மற்ற மாணவர்களால் அவர்கள் மதிக்கப்பட்டனர். ஆனால், அறிவுக்கூர்மையற்ற சிலர் மட்டும், அந்த நல்ல மாணவர்களிடம் பொறாமை கொண்டிருந்தனர். குருவின் உபதேசங்களைக் கிரகித்துக் கொள்ளும் திறன் தங்களிடம் குறைவாயிருப்பதை அவர்கள் மறந்துவிட்டனர்.

ஏனோ குருவின் பாரபட்சமற்ற தன்மையில் அவர்களுக்குச் சந்தேகம். அவர் பக்தியுணர்வுடைய மாணவர்களுக்கு மட்டும் இரகசியமாக விசேட அறிவைப் புகட்டுவதாக எண்ணிக் கொண்டனர்.

ஒருநாள் குருதேவர் தனித்திருந்த போது அவரிடம் சென்று, "ஐயனே! தாங்கள் பாடம் கற்பிப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று சந்தேகப்படுகிறோம். தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டும் உங்கள் ஞானத்தின் முழுப்பலனையும் நீங்கள் வழங்குவதாய் கருதுகிறோம். ஏன் எங்களுக்கும் அந்தச் சலுகையை விரிவுபடுத்தக் கூடாது?"என்று கேட்டனர்.

குருதேவர் அந்த வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்தார். ஆனாலும், அமைதியாகப் பதிலளித்தார்.

"நான் உங்கள் அனைவரையும்ஒரே மாதிரித்தான் மதித்து நடத்துகிறேன். யாருக்கும் தனிப்பட்ட முறையில் சலுகை காட்டவில்லை. உங்களில் சிலர் விரைவாக முன்னேறியிருந்தால், நான் சொல்கிறவற்றை அவர்கள் ஊன்றிக் கவனித்திருக்க வேண்டும். நீங்களும் அவ்வாறு முயன்று கற்பதை யார் தடுத்தது?" என்று கேட்டார் அவர்.

ஆனால், மாணவர்கள் அவருடைய பதிலில் திருப்தியடையவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்த குரு, ரொம்பச் சரி! குறை பட்டுக் கொள்கிறவர்கள் மீது நான் விசேட கவனம் செலுத்துகிறேன். ஆனால், ஒரு நிபந்தனையின் பேரில் தான். ஒரு சின்னப் பரீட்சை வைப்பேன். அதில் நீங்கள் தேறியாக வேண்டும்.

"பரீட்சை இதுதான். நீங்கள் அடிக்கடி போய்வருகிற பக்கத்துக் கிராமத்துக்குப் போக வேண்டும். அங்கிருந்து மிகவும் தகுதியான, எல்லாவிதத்திலும் நிறைவான ஒருவரை நீங்கள் அழைத்து வர வேண்டும் அவ்வளவுதான்" என்றார்.

பரீட்சை ரொம்பவும் எளிதாக இருப்பதாக அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அதில் தேறிவிட்டால், குருவின் விசேட கவனம் தங்கள் பக்கம் திரும்பி விடுமே. அவர்கள், தங்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து, பக்கத்து ஊருக்கு அனுப்பினர், தகுதியான ஒரு நபரைக் கண்டுபிடித்து அழைத்து வருவதற்கு. ஆனால், அவனுடைய துரதிர்ஷ்டம், நல்ல தன்மை உள்ள ஒருவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு குற்றம் குறை இருக்கவே செய்தது.

அவன் நீண்ட நாட்கள் முயன்றும் பலனில்லாமல் போயிற்று. குருவிடம் வந்து, "ஐயனே! நான் தங்களிடம் இப்படிச் சொல்வதற்காக வருந்துகிறேன். அந்த ஊர் முழுக்க தேடிப் பார்த்து விட்டேன். ஒரு நல்ல மனிதன் கூட கிடைக்கவில்லை. ஒவ்வொருவரும் ஏதாவதொரு தவறைச் செய்தவர்களாகவே இருக்கின்றனர். எல்லாரும் கெட்டவர்கள்!" என்றான் அவன்.

"அட! அப்படியா? இங்கே யார் மீது நீங்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ, அவர்களுடைய அணியில் இருந்து யாரேனும் ஒருவரை அங்கே அனுப்புவோம்" என்றார் குருதேவர்.

பிறகு, அந்த பக்தியும், கடமையுணர்வும் கொண்ட மாணவர்களில் ஒருவனை அழைத்து, "நீ பக்கத்து ஊருக்குச் சென்று ரொம்பவும் கெட்டவரான ஒருவரை அழைத்து வா!" என்றார் அவர்.

குருவின் கட்டளையை ஏற்று, அந்த அணியில் இருந்து ஒருவன் அடுத்த ஊருக்குச் சென்றான். சில நாளில் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தான். "ஐயனே! என் பதில் உங்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கலாம். நான் அந்த ஊர் முழுக்க ஆராய்ந்து விட்டேன். ஒரேயொரு கெட்டவனைக் கூட என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை!" என்றான் அவன்.

அவனுடைய கருத்துரை கேட்டு, குறை கூறும் அணியைச் சேர்ந்தவர், உரத்த குரலில் சிரித்து ஆரவாரம் செய்தனர். ஆனால், அந்த மாணவன் தொடர்ந்து பேசினான், "எல்லாரும் ஏதாவதொரு நற்காரியம் செய்தவர்களாகவே இருக்கின்றனர். ஒரு நற்செயலும் செய்யாத ஒருவனை என்னால் காண முடியவில்லை" என்றான்.

"நல்லது, கெட்டது, சரி, தவறு என்பதெல்லாம் இதில் இருந்து தான் தொடங்குகிறது. எல்லாவற்றிலும் ஏதாவது ஒரு நல்லதைக் காண்கிறபோது உங்களுடைய ஞானம் மலர்கிறது. எல்லாவற்றிலும் குற்றம் காண்கிறபோது அந்த ஞானம் உதிர்த்து விடுகிறது.

"உலகம் மகிழ்ச்சியும், வருத்தமும் கலந்த கலவையாக இருக்கிறது. அதில் இருந்து நீங்கள் எதைத் தேர்ந்தெடுக்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததே ஞானம். நேர்மறை மனோபாவம் உள்ளவர்கள் விரைந்து முன்னேறுகின்றனர் ஆனால், எதிர்மறை மனோபாவம் உள்ளவர்களால் மெதுவாகத்தான் வளர்ச்சி காண முடியும்.

"குருவைப் பொறுத்த வரை, எல்லாருமே அவருக்குப் பிரியமானவர்கள் தான். ஒரு மாணவன் விலகியிருப்பதாய் உணர்ந்தால் அது அவனுடைய தவறு. நீங்கள் எந்த அளவு என்னோடு ஒன்றாயிருப்பதாக உணர்கிறீர்களோ, அந்த அளவு உங்கள் வளர்ச்சியும் சிறப்பாக இருக்கும்.

"குருவிடமாகட்டும், கடவுளிடமாகட்டும், முழுமையாய் சரணடைந்து விட வேண்டும். அரைகுறையாய் சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை!" என்றார் குரு.

## பொது அறிவு

- உலகில் மிக அதிகமாக இஸ்லாமியர்கள் வாழும் நாடு எது?

  இந்தோனேசியா

- மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு எது?

  தென்னாபிரிக்கா

- உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடி கொண்ட நாடு எது?

  டென்மார்க்

- கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது?

  இங்கிலாந்து



ஆசிரியர்: ரேடியோவை கண்டு பிடிச்சவர் "MARCONI"

மாணவன்: எங்கள் வீட்டிலையும் ஒரு ரேடியோ காணாமல் போச்சு சேர். அவர் வந்து கண்டு பிடிச்சுக்கொடுப்பாரா?

ஆசிரியர்:.... ????

## பொன்மொழிகள்

- வாழ்வின் அந்திம காலத்தை நம்பிக்கையோடும் சந்தோசத்தோடும் அணுகுங்கள். வாழ்வின் இறுதியை ஆர்வத்தோடு அணுகுங்கள், சோகத்தோடு அல்ல. ஏனெனில் வாழ்வின் இறுதிதான் சிறப்பானது. கடவுளை நம்புங்கள்.
- உன்னிடம் எந்தத் திறமை இருந்தாலும் முட்டாளிடமிருந்து உன்னைப் பிரிக்கும் தெய்வீக பொறியை வரவேற்று அதை வளர்த்துக் கொள். ஆனால் உன் வாழ்வின் குறிக்கோளாக உலக வெற்றியை கருதாதே.
- வலியை கற்றுக்கொள் கணக்கிடாதே..! வேதனையை எதிர்கொள் எதிர்க்காதே.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இனிமேலாவது ஒன்றுபட்டு ஏகோபித்த முடிவுக்கு வருவோமா?

பாராளுமன்றக் கலைப்பைத் தடுப்பதற்கு உயர்நீதிமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரா.சம்பந்தர் ஐயாவின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை நீக்கம் செய்தபோது அதற்கு எதிராக நீதிமன்றம் செல்லவில்லை.

இது எதற்கானது என்று ஆராயும்போது சிலவேளை ஆட்சிப் பீடத்தில் இருக்கக்கூடிய யாரேனும் நீதிமன்றம் செல்லாதீர்கள் என்று கூட்டமைப்புக்கு ஆலோசனை கூறியிருப்பார்களோ என்ற எண்ணத் தோன்றும்.

அல்லது இரா.சம்பந்தர் அவர்கள் எதிர்கட்சித் தலைவராக இருப்பது ஜனநாயக நடைமுறைகளுக்குப் பிழையானது என்று கூட்டமைப்பு கருதியிருந்தாலும் நீதிமன்றத்தை நாடுவது ஏற்புடையதல்ல எனக் கைவிட்டிருக்கலாம்.

எது எவ்வாறாயினும் பாராளுமன்றக் கலைப்பை நிராகரிக்க வேண்டும் என நீதிமன்றப்படி ஏறியவர்கள் தங்களின் உரிமை பறிக்கப்பட்டபோது பேசாதிருந்ததுதான் விந்தை.

பரவாயில்லை தமிழ் அரசியல் தரப்பில் விந்தைகளுக்கும் விசித்திரங்களுக்கும் குறைவே இல்லை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக் கூறுமளவில் நம் அரசியல் தலைமை இருக்கும்போது விந்தைகளுக்கும் விசித்திரங்களுக்கும் பஞ்சமில்லை என்பது உண்மையே. தவிர, இப்போதிருக்கின்ற அரசியல் சூழ்நிலைகளை அவதானிக்கும்போது எதையும் பேசலாம் எதையும் கதைக்கலாம்.

ஆனால் அவை பற்றி யாரும் கேள்வி கேட்க முடியாது. கேட்டாலும் அதற்குப் பதில் தர வேண்டிய தேவை இல்லை என்பதாகவே நிலைமை உள்ளது.

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போர் முடிந்த பின்பு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரே வழி சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெறுவதும் ஐ.நா சபை ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்குமான தக்க சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

அந்தக் காலப்பகுதியில் எங்கள் புலம்பெயர் தமிழ் உறவுகள் மேற்குலக நாடுகளின் வீதிகளில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவது கண்டும் சர்வதேச சமூகம் பேசாதிருப்பது ஏன் என்று கேள்வி எழுப்பினர்.

அதன்விளைவாகவும் சனல் 4 வெளியிட்ட ஆவணப்படங்களை அடிப்படையாகக் கொண்டும் இலங்கையில் தமிழின அழிப்பு நடந்தது என்பதை உறுதி செய்யக்கூடியதான சூழமைவு ஏற்பட்டது.

ஆனால் தமிழ் அரசியல் தலைமை இது விடயத்தில் மௌனமாக இருந்ததுடன் இலங்கை ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சென்று உரிமைகள் பெறுவதுதான் தந்திரோபாயம் என்ற கருத்தியலுடன் செயற்பட்டனர்.

எதையும் தராமல் காலாகாலமாக ஏமாற்றி வருகின்ற சிங்கள ஆட்சியாளர்கள் இனித் தருவார்கள் என்பது போல நடந்து கொண்ட நம் அரசியல் தலைமை, புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வரும் என்றும் அது வந்தால் எல்லாம் சரியாகும் என்றும் கூறிவருகிறது.

ஆனால் இப்போது புதிய அரசியலமைப்பு வராது என்பதற்கான அறிகுறிகள் தாராளமாகத் தென்படத் தொடங்கியுள்ளன.

ஆக, இனியாவது ஒன்றுபட்டு நாம் என்ன செய்ய வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர் நடக்கும்போது ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவு என்ன என்பதை ஒருமித்துக் கூறுவோம் என்று நினைத்து அதனைச் செய்தாலன்றோ விட்ட தவறை ஓரளவுக்கேனும் நிவர்த்திக்கலாமல்லவா

# தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு எவ்வாறு அழிக்கப்பட்டது

## பொலிஸ் விசேட அதிரடிப் படையின் முன்னாள் கட்டளை அதிகாரி நிமல் லெவ்கே விளக்கம்

கே.பி எனப்படும் குமரன் பத்மநாபன் கைது செய்யப்பட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு அழிக்கப்பட்ட விதம் தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முன்னாள் கட்டளையதிகாரி நிமல் லெவ்கே நேற்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது,

LTTE அமைப்பிற்கு சர்வதேச ஒத்துழைப்பு காணப்பட்டமையினாலேயே அந்த அமைப்பு வலிமைப்படுத்தப்பட்டது. எனினும், அப்போதிருந்த ஆட்சியாளர்களால் யுத்தத்தின் இறுதிப் பாதியில் சர்வதேச ஒத்துழைப்பை எமது நாட்டிற்குப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

சர்வதேசத்திடமிருந்து கிடைக்க வேண்டிய அனைத்து ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை, அந்தப் பிரிவுகள் மற்றும் ஆட்சியாளர்களிடம் காணப்பட்டது.

அந்த சாதகத்தன்மையே எமக்கு வலிமையைக் கொடுத்தது. கே.பி. மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டார். அவ்வாறான நாடொன்றிடம் கோரிக்கை விடுத்து, ஏதேனுமொரு குற்றத்துடன் தொடர்புடையவரை எமது நாட்டிற்கு அழைத்து வருவதற்கான இயலுமை அப்போது காணப்பட்டது.

அது பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்குள் உள்ளடங்கும் நாடு என்பதால் அதனை முன்னெடுக்க முடிந்தது. பொருத்தமான இடத்தில பொருத்தமான அதிகாரிகள் காணப்பட்டமையே, யுத்த வெற்றிக்கு முக்கிய காரணம்.

அவ்வாறான குழுவிற்கு, அரசியல் ரீதியாக தலைமைத்துவம் கிடைத்தால் நிச்சயமாக அதன் பெறுபேறு மகிழ்ச்சியானதாக அமையும என பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முன்னாள். கட்டளையதிகாரிநிமல்லெவ்கே குறிப்பிட்டார். (ம-3)

# தலைக்கவசம் அணியாமல் மாணவர்களை ஏற்றிச் சென்ற

## 25 பேருக்கு தண்டம் விதிப்பு

தலைக்கவசம் அணியாது பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற 25 பேருக்கு சாவகச்சேரி பொலிஸார் தண்டம் விதித்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொறுப்பதிகாரியின் விசேட உத்தரவின் கீழ் போக்குவரத்து பொலிஸார் தலைக்கவசம அணிவிக்காது மாணவர்களை ஏற்றிச் சென்றவர்களுக்கே நேற்று செவ்வாய்க்கிழமை தண்டம் விதித்தனர்.

மேலும் எதிர்வரும் நாட்களிலும் தாம் தொடர் கண்காணிப்பில் ஈடுபட உள்ளதாகவும் எனவே மாணவர்களை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் செல்வோர் கட்டாயம் மாணவர்களுக்கு தலைக்கவசம் அணிவித்து அழைத்துச் செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான இடங்களில் தலைக கவசம் அணிவிக்காது பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிளில் பலர் ஏற்றிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

இதனால் பல விபத்துச் சம்பவங்களின் போது மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலை காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-3)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான வழக்கு 26ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சவாலுக்கு உட்படுத்தும் மனு மீதான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

குறித்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளிலிருந்து தனிப்பட்ட காரணத்தினால் நீதிபதி தீபாலி விஜேசுந்தர ஏற்கெனவே விலகியிருந்தார்.

அரச நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி பணம் ஈட்டும் வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் தனியார் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார்.

இந்நிலையில் அவரால் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க முடியாது என தெரிவித்து கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஷர்மிளா கோனவல, பிரதமருககு எதிரான மனுவைத தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# கேப்பாபிலவு நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட

## வயோதிப தாய் மருத்துவமனையில்

கேப்பாபிலவு நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வயோதிப தாயார் ஒருவர் போராட்ட இடத்தில் இருந்து 11.02.19 அன்று வீதிக்கு செல்ல முற்பட்ட வேளை தலைசுற்றி கீழே விழுந்த நிலையில் சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

711ஆவது நாளாக (11.02.19) படையினர் அபகரித்துள்ள காணியினை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். வயோதிப நிலையிலும் காணி மீட்பு போராட்டத்தில் முனைப்புடன் செயற்பட்டு வந்த கேப்பாபிலவினை சேர்ந்த 64 அகவையுடைய அழகம்மா என்று அழைக்கப்படும் ஆரோக்கியநாதன் எலிசபெத் அம்மா தலைச்சுற்றி கீழே விழுந்த நிலையில் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெறறு வருகின்றார். (ம-281)

# எமில் ரஞ்சன் மீண்டும் மறியலில்

(கொழும்பு)

வெலிக்கடை சிறையில் 27 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவ எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான முன்னிலையில்நேற்று ஆஜர்படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கூட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில பட்டாணிச்சூர் கிராமம், லக்ஸபானா வீதி, தோணிக்கல், வவுனியா கிறிட்டிலிருந்து பொகஸ்வேவ வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, நேரியகுளம், இலுப்பைக்குளம், துட்டுவாகை, அழகபுரி, சின்னகுளம், தந்திரிமலை வீதி, சின்ன சிப்பிகுளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தான்குளம் 1st Farm, கஜசிங்கபுர இராணுவ முகாம், New Steel Pvt (Ltd) ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் பிரதேசம், பெரியகரைசல் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# ஆன்மீகச் சிந்தனைகள்

## பக்திக்கு வேண்டாம் பணம்

+ முதுமைக்கு வேண்டியவற்றை இளமையில் தேட வேணஒரு பறவை வானில் பறக்க வேண்டுமானால் அதற்கு இரண்டு இறக்கைகள் வேண்டும். அதுபோல இறைவழிபாட்டிற்கு அன்பும், ஆச்சாரமும் வேண்டும். அன்பில்லாத ஒழுக்கமோ அல்லது ஒழுக்கமில்லாத அன்போ பயனற்றதாகும்.
+ கண்ணால் காணமுடியாததால் கடவுள் இல்லை என்று கூறக்கூடாது. இந்த உடம்பிலேயுள்ள உயிரை நாம் எப்போதாவது கண்ணால் கண்டதுண்டா? உயிரைப் பார்க்க முடியாததால் நாங்கள் உயிரில்லாதவர்கள் என்று கூறினால் உலகம் சிரிக்குமல்லவா? உடம்புக்குள் உயிரும், உயிருக்குள் தெய்வமும் உறைந்திருக்கின்றன. ஆகவே, கடவுள் உயிர்கள் தோறும் உறைகின்றார். எவ்வுயிரும் இறைவன் சந்நிதியே. அதனால், எல்லா உயிர்களுக்கும் நாம் நன்மையே செய்ய வேண்டும். உயிர்களுக்குச் செய்யும் நன்மை கடவுளுக்குச் செய்யும் நன்மையாகும்.
+ கிருதயுகம், திரேத்தாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று யுகங்கள் நான்காகும். ஒவ்வொரு யுகத்திலும் இறைவனை அடையும் வழிகள் வேறுவேறாகும். கிருதயுகத்தில் ஞானத்தினாலும், திரேதாயுகத்தில் தானத்தினாலும், துவாபரயுகத்தில் யாகத்தினாலும், கலியுகத்தில் பக்தியினாலும் முக்தி பெறலாம். பக்தி செய்ய பணச்செலவு செய்ய வேண்டியதில்லை. இறைவனின் திருநாமத்தை அன்போடு அனுதினமும் உச்சரித்தால் போதும்.

# யாழ்ப்பாணம் சுப்பர்லீக் முதலாவது பருவகால சம்பியனாகியது வேலணை வேங்கைகள்

உத்தமக்குமரனின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் சுப்பர் லீக்கின் முதலாவது பருவகாலப் போட்டியில், பலமிக்க ஜப்னா பந்தேர்ஸ் அணியை தோற்கடித்து வேலணை வேங்கைகள் அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியில் 8 அணிகள் பங்குபற்றியிருந்தன. அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின.

முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெற்று, ஒவ்வொரு பிரிவிலும் முதலிரு இடங்களைப் பெற்ற அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன. ஏ பிரிவில் இருந்து ஜப்னா பந்தேர்ஸ் மற்றும் அரியாலை வோரியர்ஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள் மற்றும் கொக்குவில் ஸ்ரார்ஸ் அணிகளும் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

பிளே ஓவ் சுற்றிலிருந்து இறுதிப் போட்டிக்கு வேலணை வேங்கைகள் அணியும் ஜப்னா பந்தேர்ஸ் அணியும் நுழைந்தன. இறுதிப்போட்டி 9 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஜப்னா பந்தேர்ஸ் அணியின் அருண்குமார் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். அதற்கிணங்க களமிறங்கியது வேலணை வேங்கைகள் அணி. வேங்கைகளுக்கு ஆரம்பம் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை.

தொடக்க இரண்டு துடுப்பாட்ட வீரர்களும் அணி 25 ஓட்டங்களைப் பெற்ற போது வெளியேற்றப்பட்டனர்.

11 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களை எடுத்து இக்கட்டான நிலையில் வேலணை வேங்கைகள் அணி இருந்தது. அதன்பின்னர் ஜோடி சேர்ந்த சத்தியன் - உத்தமன் ஜோடி மேலதிக விக்கெட் இழப்பின்றி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. உத்தமக் குமரன், அதிரடியில் வெளுத்து வாங்கினார். வெறும் 20 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். 17.1 ஓவர்களில் 151 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, சத்தியன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். உத்தமக்குமரன் 73 ஓட்டங்களைப் பெற்ற போது, ரன்அவுட் ஆனார்.

வேலணை வேங்கைகள் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் ஜப்னா பந்தேர்ஸ் அணி சார்பாக, கதியோன், சுரேந்திரன் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

172 என்ற மிகப்பெரிய இலக்கை நோக்கி பதிலளித்தாடிய ஜப்னா பந்தேர்ஸ் அணிக்கு தொடக்கம் முதல் அடி விழுந்தது. முக்கிய துடுப்பாட்ட வீரர்களான சந்தோஸ் 11, மோகன்ராஜ் 20, அணித்தலைவர் அருண்குமார் 00 என ஆட்டமிழந்து வெளியேறினார்கள். 10.2 ஓவர்களில் 75 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தோல்வியடையும் நிலை யில் இருந்தது.

எனினும், பின்வரிசையில் குறிப்பாக பிரசன்னா, அநுரதன், கதியோன் மற்றும் சயந்தன் ஆகியோர் அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றனர். எனினும், அவர்களும் ஆட்டமிழக்க இறுதி ஓவரில் 15 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் ஜப்னா பந்தேர்ஸ் அணி தள்ளப்பட்டு, அந்த ஓவரை சிறப்பாக வீசிய உத்தமக்குமரன் 10 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து, வேலணை வேங்கைகளை 4 ஓட்டங்களால் வெற்றிபெற வைத்தார்.

ஜப்னா பந்தேர்ஸ் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் பிரசன்னா 36, அநுரதன் 22, மோகன்ராஜ் 20, சயந்தன் 19, கதியோன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் வேலணை வேங்கைகள் அணி சார்பாக ரி.சத்தியன் 4 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் லிங்கநாதன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் தொடர் நாயகன் விருதுகளை அரியாலை வோரியர்ஸ் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ஜெரிக் துசாந் பெற்றுக் கொண்டார். தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் இறுதிப்போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராகவும் வேலணை வேங்கைகள் அணியின் சத்தியன் தெரிவு செய்யப்பட்டார்.

வேலணை வேங்கைகள் அணியின் உத்தமக்குமரன் இறுதிப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் ஆட்டநாயகன் விருதுகளையும் ஜப்னா பந்தேர்ஸ் அணியின் கதியோன் இறுதிப்போட்டியின் சிறந்த களத்தடுப்பாளர் விருதையும் பெற்றுக் கொண்டனர். (க-26)










## சதுரங்கப் போட்டி

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் நொவிஸ் பிரிவு சதுரங்கப் போட்டி எதிர் வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பமாகி 16 சனிக்கிழமை மற்றும் 17 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் தொடர்ந்து நடைபெறும். போட்டிக்குரிய கட்டணத்தை செலுத்தி தரப்படுத்தற்பட்டியலில் இடம்பெற்ற யாவரும் வயது, பால் வேறுபாடு இன்றி இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். இப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் மார்ச மாதம் நடைபெறும் மேஜர்ஸ் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். (க)

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியன்




இலங்கைப்பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை பாடசாலைகளின் 19 வயது பிரிவு பி அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியானது நடத்தப்பட்டது.

இந்தச் சுற்றுப் போட்டியானது கந்தானை டி மசினோட் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியானது கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கண்டி கேட்வே கல்லூரி அணி மோதியது.

ஆரம்பத்தில் கொக்குவில் இந்துவின் ஆதிக்கம் மேலோங்கியிருக்க, முதற்கால் பாதியாட்டத்தில் கொக்குவில் இந்து 18:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் இருந்து கண்டி கேட்வே அணி, கடுமையாகப் போராடி புள்ளிகளைச் சேர்த்த போதிலும் முதல்கால் பாதியாட்டத்தின் வித்தியாசத்தை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

சளைக்காது ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, இரண்டாவது கால் பாதியாட்டம் முடிவில் 32:20 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் மூன்றாவது கால் பாதியாட்டம் முடிவில் 43:33 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் முன்னிலை பெற்றிருந்தது.

தொடர்ந்து, நான்காவதும் இறுதியுமான கால் பாதியாட்டம் முடிவடைகையில், 53:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

இறுதிப்போட்டியின் சிறந்த பெறுமதிமிக்க வீராங்கனையாக கொக்குவில் அணியின் கமலதாஸ் தமிழரசி தெரிவு செய்யப்பட்டதுடன் தொடரின் சிறந்த வீராங்கனையாக பி.பானுவும் தெரிவு செய்யப்பட்டார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, இந்தச் சுற்றுப் போட்டியில் முதற்போட்டியில் வத்தளை சென்.ஆன் பெண்கள் பாடசாலை அணியை 44:30 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாவது போட்டியில் பாணந்துறை லைசியம் சர்வதேச பாடசாலை அணியை 49:24 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

தொடர்ந்து கண்டி மகாமாய பாலிக்க வித்தியாலய அணியை 47:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மாகாண அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சென்றலைட்ஸ் அணி சம்பியனாகியது




இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், வட மாகாண கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியானது கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா பம்பைமடு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து வவுனியா யுனிபிட் விளையாட்டுக்கழக அணி மோதியது. 50 ஓவர்களைக் கொண்ட இந்தச்சுற்றுப் போட்டியானது, போதிய நேரமின்மையால் 45 ஓவர்களாகக் குறைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

முதலில் துடுப் பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி, 45 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 251 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் கௌதமன் 63, பிரியலக்சன் 47, டர்வின் 36, ஜனோசன் 27 ஓட்டங்களையும் நிரோஜன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

252 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய யுனிபிட் அணி 43.5 ஓவர்களில் 189 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் நிமலேஸ் 43, ருசாந்தன் 24, மதுசன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, அலன்ராஜ் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், மயூரன், ஜெரிக்து சாந்த், தசோபன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

# வடக்கில் விவசாய அழிவிற்கு ரூ.400 மில்லியன் நட்டஈடு

## பிரதமர் தலைமையில் நாளை வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் வடக்கில் இடம் பெற்ற வெள்ள அழிவில் விவசாய நிலங்கள் பயிர்களுடன் பெருமளவில் அழிவடைந்திருந்தன.

அதற்கு இழப்பீட்டுத் தொகையாக 400 மில்லியன் ரூபாய் நிதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் நாளை வியாழக்கிழமை விவசாயிகளுக்கு வழங்கி வைக்க உள்ளதாக தெரியவருகிறது. அந்தவகையில் விவசாய நிலங்கள் அழிவடைந்து வடக்கிலுள்ள மாவட்டங்களான கிளிநொச்சி மாவட்டத்தில் 8950 ஏக்கர் நிலப்பரப்பிற்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2100 ஏக்கர் நிலப் பரப்பிற்கு, யாழ்ப்பாணத்தில் 1200 ஏக்கர் நிலப்பரப்பிற்கு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தில் 12280 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் நட்டஈடு வழங்கப்படவுள்ளதோடு ஒரு ஏக்கருக்கான நட்டஈடாக 40,000 ரூபாய் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

## யாழ் வேம்படி...

யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ் வேம்படி மகளிர் கல்லூரி வீதியை காலை வேளையிலும் பாடசாலை நிறைவடையும் நேரத்திலும் ஒரு வழிப் பாதையாக அமைக்குமாறு வலம்புரி பல தடவை சுட்டிக்காட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## நடுக்கடலில்...

சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான அலெக்சாண்டர் செபஸ்தியான் (வயது 69) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்

குருநகர் கடற்கரையில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு குறித்த நபர் உட்பட 7 பேர் மண்டைதீவு கடலுக்கு மீன்பிடிக்கச்சென்றுள்ளனர்.

கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது திடீரென குறித்த நபர் கடலுக்குள் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக சக மீனவர்கள் அவரை மீட்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர் அவரை பரசோதித்த வைத்தியர் குறித்த நபர் இறந்துவிட்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## இலங்கையில்...

யிலான சந்திப்பு நீதியமைச்சில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இச்சந்திப்பின்போது மனித உரிமையை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தலதா அத்துகோரள ஐ.நா.அதிகாரிக்கு விளக்கிக் கூறியிருந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்துறை பிரதானி மோனா ஏ. ரிஷ்மாவி, இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பாராட்டுவதாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழு தனது ஆதரவுகளைத் தொடர்ந்து வழங்கும் என மேலும் தெரிவித்திருந்தார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை அலுவலகத்தின் நீதித்துறை நடவடிக்கைக்கான ஆலோசகர் இஸ்டெல்லா அஷ்கிவ் ரீனொட் மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சின் செயலாளர் மீகஸ்முல்ல ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐ.நா மனித உரிமை பேரவையில்...

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் தொடர்பான பிரேரணையின் மீது கவனம் செலுத்தப் போவதாகவும், சிரியா, தென்சூடான் தொடர்பான பிரேரணைகளையும் முன்வைக்கப் போவதாகவும் பிரிட்டன் கூறியுள்ளது.

பிரிட்டனுடன் இணைந்து, கனடா, ஜேர்மனி, மெசிடோனியா, மொன்ரெனிக்ரோ ஆகிய நாடுகள், இலங்கை தொடர்பான பிரேரணையை முன்வைக்கவுள்ளன. இணை நாடுகள் மீண்டும் இலங்கையுடன் இணைந்து, செயற்பட எதிர்பார்க்கிறது. இந்த ஒத்துழைப்பு 2015இல் ஆரம்பித்தது.

பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் வாக்குறுதிகளை இலங்கை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த, பேரவையுடன் இணைந்து செயற்படும்.

பிரேரணை வரைவு இயல்பான நடைமுறைப்படி இருக்கும். அத்துடன், 2015 இல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறுவப்பட்ட செயல்முறைகளை மேலும் விரிவுபடுத்தக் கோருவதாக அமையும்.

பேரவையின் நடைமுறைகளுக்கு அமைய முறைசாரா பேச்சுக்களை நாங்கள் ஆரம்பிப்போம்.


மீண்டும் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு பேரவையின் முழு ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறோம் என்றும் பிரிட்டன் தெரிவித்துள்ளது. (ம-3)

# சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாட்டை அரசியல்வாதிகளுக்காக விடமுடியாது

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தில் நாடு தற்போது கண்டுவரும் வெற்றிகள் அனைத்தும் 19 ஆம் சீர்த்திருத்தத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியாகும். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு மற்றும் சுயாதீனமான நீதிதுறையின் செயற்பாட்டை மீண்டும் அரசியல்வாதிகளின் நலன்களுக்கு பயன்படுத்தி கொள்ள இடமளிக்க முடியாது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



மேலும் குற்றவாளிக்கு தகுந்த தண்டனையை பெற்றுக்கொடுப்பதற்கு எவராது தடையாக இருப்பார்களானால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு மாலிகாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "லக்ஹிரு செவன" வீடமைப்பு கட்டிடத் தொகுதியினை மக்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போதைய காலகட்டத்தில் போதைப்பொருள் பாவனையின் அளவினை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம். போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தோம்.

தொடர்புபட்ட பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடியபோது நம்பிக்கையுடைய சுயாதீனமான நீதிமன்றமொன்றினை உருவாக்கி கொடுக்குமாறே என்னிடம்வேண்டுகோள் விடுத்தனர். மேலும் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கவேண்டிய சூழ்நிலைகள் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்க கூடிய நிலைமைகள் உருவாகும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பக்கச்சார்பின்றி செயற்படுவதற்கான சூழ்நிலைகளை பொலிஸாருக்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். பக்கச்சார்பின்றி செயற்பட கூடிய திறமையான அதிகாரிகளை நியமிக்குமாறும் கோரியிருந்தனர். அதிகாரிகளை சுதந்திரமாக செயற்படுவதற்கான வாய்ப்புக்களும் நீதிதுறையின் சுயாதீன தன்மையும் ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே உண்மையான குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்க முடியும்.

அதற்கிணங்கவே சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அதற்கென பொலிஸ் பிரிவினால் பல்வேறு போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோன்று பொலிஸாரின் பதவி உயர்விலும் பாரிய பிரச்சினைகள் காணப்பட்டன. நம்பிக்கை இல்லாதவர்களுக்கு பதவி உயர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெறும் இதுபோன்ற நியாயமற்ற செயற்பாடுகள் சிறந்த பொலிஸ் அதிகாரிகளை இனங்காண்பதிலும் சிக்கலை ஏற்படுத்தியது.

பொலிஸ் பிரிவில் காணப்பட்ட இது போன்ற பாரிய பிரச்சினைகளுக்கு பொலிஸ் ஆணைக்குழுவினூடாக தீர்வுகளை பெற்றுக் கொண்டோம். அதேபோன்று நீதிமன்றத்தின் சுயாதீன தன்மையினூடாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகளை பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்புக்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

மேலும் பொலிஸாருக்கான வெளிநாடுகளினூடாக விசேட பொலிஸ் பயிற்சிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இவ்வாறான பாரிய செயற்பாடுகளினூடாகவே ஒவ்வொரு நாளும் போதை பொருள் விற்பனையாளர்களை கைது செய்யும் அளவு அதிகரித்தது.

பொலிஸ் ஆணைக்குழு மற்றும் நீதித்துறையின் சுயாதீன செயற்பாடுகளை அரசியல்வாதிகளின் சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொள்ள இடமளிக்க முடியாது. குறைபாடுகள் இருப்பினும் அதனை திருத்திக்கொண்டு வளர்ச்சி பாதையில் செல்லவே முயற்சிக்க வேண்டும்.

அதைவிடுத்து தற்போது உருவாக்கி கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தை இழந்துவிடக் கூடாது. போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை அடையாளங்காணும் போது எவராவது அதற்கு எதிராக செயற்படுவார்களானால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நீதிதுறையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருந்தபோது கட்சி பேதமின்றி அனைவரும் ஒருமித்து செயற்பட்டே தற்போது சிறந்த நீதிமன்றத்தை உருவாக்கியுள்ளோம்.

19 ஆம் சீர்திருத்தத்தால் பெற்றுக் கொடுப்பதாக கூறிய அனைத்து விடயங்களையும் இன்று மக்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ள தாகவும் மீண்டும் பழைய நிலை மைக்கு நாட்டை வழிநடத்த இட மளிக்க போவதில்லை என்றார். (ம-3)

## மோ.சைக்கிளில் வந்த...

மூடியவாறு வந்த நபர்கள் தாலிக் கொடியை அறுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தாலிக் கொடியை அறுக்கும் போது அப் பெண் நிலத்தில் வீழ்ந்து காய மடைந்துள்ளார் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## 12 பேர் கொண்ட கும்பலால்...

பட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து விடு முறையில் வந்துள்ள வேதாரணியம் ஜெகதீஸ்வரன் (48) என்பவரே வாள்வெட்டிற்கு இலக்கானார்.

அந்த பகுதியிலுள்ள கோயில் தொடர்பான பிணக்கே வாள் வெட்டில் முடிந்துள்ளதாக கூறப்படுகிறது.

தொலைபேசியில் தொடர் பேற்படுத்தி அச்சுறுத்தி விட்டே வாள் வெட்டு கும்பல் அங்கு சென்று தாக்குதல் நடத்தியது.

கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-3)


கொவிசெத
திகதி 2019.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 2033
I 31 54 60 79
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 3854
O 0 5 7 5 5 6
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 511
விருச்சிகம் 27 36 45 55 24
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 3854
O 0 5 7 5 5 6
தேசிய லொத்தர் சபை

## திருப்பதி ஏழு...

தி ஹிந்து ஊடகம் சார்பில் , பெங்களூரில் கடந்த 9ஆம் திகதி பன்னாட்டு உறவுகள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், மகிந்த ராஜபக்ஷ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

இதையடுத்து அவர், திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நடைபெறும் ரத சப்தமி விழாவில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்வதற்காக, நேற்று முன்தினம் மாலை பெங்களூரில் இருந்து சிறப்பு விமானம் மூலம் ரேணி குண்டா விமான நிலையம் வந்தடைந்தார். அங்கிருந்து, பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில்காரில் புறப்பட்டு திருமலைக்குச் சென்றார்.

திருப்பதி மலையில் இரவு தங்கிய அவர், தன்னுடைய குழுவினருடன் நேற்று அதிகாலை வி.ஐ.பி. தரிசனத்தில் ஏழுமலையானை தரிசனம் செய்தார். பின்னர் அவருக்கு கோயிலில் உள்ள ரங்கநாயகர் மண்டபத்தில் தேவஸ்தானம் சார்பில் பிரசாதங்கள் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் கோயிலுக்கு வெளியே செய்தியாளர்களிடம்பேசிய மகிந்த ராஜபக்ஷ, சுவாமி தரிசனம்சிறப்பாக நடைபெற்றது. சுவாமி தரிசனத்திற்காக கோயிலுக்கு வந்த இடத்தில்அரசியல் குறித்து பேச விரும்பவில்லை என தெரிவித்தார். (ம-3)

## வடக்கின் நீர்ப் பிரச்சினைக்கு...

கத்தில் இடம்பெற்ற வட மாகாணத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள நீர் வழங்கல் செயற்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு பற்றிய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, விவசா யத்தை பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட இப்பிரதேச மக்களுக்கு அவர்களது விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் உரியவாறு பெற்றுக்கொடுக்கப்படின்வட மாகாணத்தில் நிலவும் ஏனைய அபிவிருத்தி பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என தெரிவித்தார்.

சுற்றாடல் பாதிப்புகளின்றி நடைமுறைப்படுத்தப்படும் இந்த செயற்திட்டத்தினூடாக துரித மற்றும் வெற்றிகரமான பெறுபேறுகளை வடக்கு மக்கள் பெற்றுக்கொள்வார்கள் என ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார். வட மாகாண நீர்ப்பாசன மற்றும் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள ஏனைய நீர் வழங்கல் திட்டங்களின் முன்னேற்றம் குறித் தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.

முன்மொழியப்பட்டுள்ள வடமத்திய பாரிய கால்வாய்த்திட்டம், நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியில் 2020ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள "யாழ்ப்பாணத்திற்கு நீர்" செயற்திட்டம் ஆகியன தொடர்பாகவும் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஜயிக்கா நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படும் "எல்லங்கா" குளக் கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மகாவலி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும மற்றும் அவ் அமைச்சின் செயலாளர் அநுர திசா நாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம-3)


### போலந்து வேலைவாய்ப்பு

களஞ்சிய அறை உதவியாளர்கள்
சம்பளம்: 800 - 1000 யூரோ
ரூ. 160,800 – ரூ.201,000 வரை
2 வருட மீள்புதுப்பிக்கத்தக்க ஒப்பந்தம், தினமும் 12 மணி வாரத்தில் 6 நாள் வேலை, உணவு, தங்குமிடம், மருத்துவம், இருவழி விமான டிக்கட் வழங்கப்படும்
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
021 221 9 221
221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-5465)


## நாகர்...

ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் வீட்டிற்கு பின்புறம் கிடங்கு வெட்டிய போது குண்டு ஒன்று தென்பட்டுள்ளது.

இதனையடுத்து இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் அப்பகுதிக்கு சென்ற போது அங்கு காணப்பட்டது 120 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு என தெரியவந்தது.

இன்று புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு அப்பகுதி தோண்டப்படவுள்ளது. (ம-60)




### நியூசிலாந்து வேலைவாய்ப்பு

மோட்டார் சைக்கிள் மெக்கானிக்
பலவித மோட்டார் சைக்கிள் திருத்தும் பணிகளில் அனுபவம் - ஆங்கில அறிவு
2 வருட பணி ஒப்பந்தம் (மீள்புதுப்பிக்கத்தக்கது)
தினமும் 8 மணி + OT, வாரத்தில் 6 நாள் வேலை
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
077 00 38 215
021 221 9 221
221-1/1. மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk
(C-5485)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அண்மையில்) ஒரு பரப்பு 2 குளி காணியில் புதிதாக வாஸ்து முறைப்படி வடக்கு வாசல் கொண்டு சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0770767114, 0766003303



### யுத்த சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கான நட்டஈடு

கடந்த கால யுத்த சூழல் காரணமாக வீடு மற்றும் சொத்துக்களை இழந்து இதுவரை விண்ணப்பிக்காத அரச ஊழியர் மற்றும் சாதாரண பொது மக்கள் சுற்றறிக்கை 49/89 மற்றும் ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்பு செய்யும் அதிகார சபையின் சுற்றறிக்கையின் கீழ் விண்ணப்பிப்பதற்கு கிளி. மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள றொபட்சன் மொழி பெயர்ப்பாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு படிவங்களை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

S.ஜோண்பப்ரிஸ் நிர்வாகி. றொபட்சன் மொழிபெயர்ப்பாளர் அலுவலகம் – கிளிநொச்சி. தொடர்பு : 0775712883
(C-5484)


## விசுவமடுவில்...

இளங்கோபுரத்தினை சேர்ந்த 54 அகவையுடைய கே.சுந்தரம் என்பவர் அவரது வீட்டில் சடலமாக காணப்பட்டபோது அயலவர்களால் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் சடலத்தினை மீட்டு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்கள்.

வயோதிபரின் சடலமானது மரண விசாரணை அதிகாரியின் விசாரணை அறிக்கையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-281)

## இரசாயன தொழிற்சாலை...

கைத்தொழில் பிரதியமைச்சர் புத்திக பத்திரன தெரிவித்தார்.

பிரதியமைச்சர் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது, பரந்தனில் தரைமட்டமாக்கப்பட்டுள்ள இரசாயன தொழிற்சாலையை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், ஐந்து மாடிகளை கொண்ட பரந்தன் இரசாயன தொழிற்சாலை தற்போது தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. சுமார் 200 ஏக்கர் காணி வனாந்தரமாகக் காட்சியளிக்கிறது.

எனவே, இங்கு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பற்ற வகையிலான இரசாயன தொழிற்துறையொன்றை ஆரம்பிப்பது தொடர்பாக எமது அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முதலீட்டா ளர்களை இணைத்து இந்நடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, வடக்கிலுள்ள தொழிற்துறையாளர்களை சந்தித்து அவர்களது பிரச்சினைகள், தடைகள் மற்றும் அவர்களுக்கான ஊக்குவிப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவும் இந்த விஜயத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்துவதே எமது நோக்கம் என தெரிவித்தார். (ம-3)

## சுதந்திரக் கட்சி...

நேற்று மாலை அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்து, சிறி ஜெயவர்த்தனபுர தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு மருத்துவ சோதனைகள் நடத்தப்பட்டு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)


### ஆசிரியர்கள் தேவை

தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு தரம் 6-11 வரையிலான பாடங்களை கற்பிக்கக் கூடிய மல்லாகம் மற்றும் தெல்லிப்பழை பகுதியை அண்டிய ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு - 076 638 4420 -நிர்வாகி
(C-5483)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-5439)

### வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7503)



### கண்ணீர் அஞ்சலி



எமது வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த
சிந்தியா அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
புளோரன்ஸ் தங்கமணி செல்வரட்ணம்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலம்புரிக் குடும்பம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.